கியானவன், இந்திரியங்களுக்குப் புலப்படாதவும், புத்தியினுலேயே யறியத்தக்கவும், அளவிறந்தவும், அந்தமில்லாதவுமான சுகத்தை யநுபவிக்கிறுனே, எந்த சுகாநுபவத்திலிருந்தும் பிரிகிறதில்லையோ, எதை யடைந்து (பிறகு) அதைக்காட்டிலும் மற்றென்றை யதிகப் பிரயோசனமாக வெண்ணுகிற தில்லையோ, எந்தயோகத்திலிருக்கி றவன் விசேஷமான துக்கத்தினுலுங் கூடச் சலிப்பிக்கப் படுகிறதில் லையோ, சகல துக்கங்களுடைய சம்பந்தத்தைப் போக்கடிக்கிற அதை (அந்த யோகநிஷ்டா நிலைமையை) யோகமென்கிற பெயரை யுடையதாக வறியவேண்டியது. உறுதியுடன் சலிக்காமலிருக்கிற மனதையுடையவனுலே அப்படிப்பட்ட யோகமானது, அடையத் தகுந்தது. (௨0-௨க-௨௨-௨ங.)

உசு. ஸங்கல்பப்ரபவான்காமாம்ஸ்த்யக்த்வாஸர்வான–சேஷத:।
மநஸைவேந்த்ரியக்ராமம் விநியம்யஸமந்தத:॥

உஞ. ஸநை:ஸநைருபரமேத்புத்த்யாதிருதிருஹீதயா।
ஆத்மஸம்ஸ்தம்மந:க்ருத்வா நகிம்சிதபிசிந்தயேத்॥

ஸங்கல்பப்ரபவான்	சங்கற்பத்திலுண்டாகிற
ஸர்வான்	சகலமான
காமான்*	காமங்களை (விஷயஆசைகளை)
அசேஷத:	முற்றிலும்
த்யக்த்வா	விட்டு
மநஸைவ	மனதிலேயே
இந்த்ரியக்ராமம்	சகலமான இந்திரியங்களை
ஸர்வதஸ்	சகலவிஷயங்களினின்றும்
விநியம்ய	திருப்பி
த்ருதிருஹீதயா†	தைரியத்தில் ஸ்வாதீனஞ் செய்து கொள்ளப்பட்ட

---

* (ஈ) காமங்கள், சங்கற்பத்தி லுண்டாவது, ஸ்பரிசத்தி லுண்டா வது என விருவகைப்படும். சங்கற்பமென்பது - இன்னகாரியத்தைச் செய்யவேண் டும், அதிலுலிவ்விதபலனை யடையலாமென்று மனதிலுண்டாகும் தோற்றம், அல்லது மனதிலுலுத்தேசிப்பது; இதிலுலுண்டாவது புத்திராதிகள். ஸ்பரிசமென் பது-ஞானேந்திரிய கருமேந்திரியங்கள் விஷயங்களில் சம்பந்தப்படுவது; இதிலு லுண்டாவது சீதோஷ்ணாதிகள். இவ்விரண்டுவிதமாய்த்தான் காமங்களுண்டாகின் றன. முந்தியதை விட்டுவிடவேண்டும். பிந்தியதை முழுதும் விடுவது அசாத்தியமா னதால் அதின் மூலமா யுண்டாகும் சுகதுக்கத்தை விடவேண்டியது.

† (ஈ) விவேகத்தோடுகூடின.

வொஐ்யா	புத்தியிலே
உநம்	மனதை
சூத்வஸ்ஸ்தம்*	ஆத்மாவிடத்திலே யிருக்கும்படி
சூகூவா	செய்து
ஸ்மிநம்ஸ்மிநம்	மெள்ள மெள்ள (சிறுகச்சிறுக)
உவாரமேசு	(மனதை) நிறுத்தவேண்டும்
கிஞ்சிதபி ந - விசிந்தயேசு	ஒன்றையுஞ் சிந்திக்காமலிருக்க வேண்டியது.

சங்கற்பத்தினாலுண்டாகிற சகலமானவிஷய ஆசைகளை முற்றிலும் விட்டு, மனதினாலேயே சகலமான விந்திரியங்களைச் சகலவிஷயங்களினின்றும் திருப்பி, தைரியத்தினால் சுவாதீனஞ் செய்துக் கொள்ளப்பட்ட புத்தியிலே மனதை ஆத்மாவிடத்திலிருக்கும்படிசெய்து, மெள்ள மெள்ள மனதை நிறுத்தவேண்டும். (அப்படி நிறுத்தியபின்பு பிரம்மத்தைத் தவிர வேறே) ஒன்றையுஞ் சிந்திக்காமலிருக்கவேண்டியது. (உசு-உநு)

உசூ. யதோயதோநிஸ்சரதி மநஸ்சஞ்சலமஸ்திரம்।
தததஸ்ததோநியம்யைதத் ஆத்மந்யேவவசம்நயேசூ॥

சூஸ்திரம்	நிலையற்றதும்
சஞ்சலம்	சஞ்சலசுபாவமுள்ளதுமான
மநம்	மனதானது
யதோயதஃ	எந்தெந்தவிஷயங்களில்
நிஸ்சரதி	பிரவேசிக்கிறதோ
ததஸ்ததஃ	அந்தந்தவிஷயங்களிலிருந்து
தத	இந்தமனதை
நியம்ய	திருப்பி (இழுத்து)
ஆத்மந்யேவ	பரமாத்மாவிடத்தில் அல்லது தன் ஆத்மசுவரூபத்திற்றானே
வசம் நயேசு	நிற்கும்படி செய்யவேண்டியது.

நிலையற்றதும், சஞ்சல சுபாவமுள்ளதுமான மனதானது, எந்தெந்த விஷயங்களில் பிரவேசிக்கிறதோ அந்தந்த விஷயங்களிலிருந்து இந்த மனதைத் திருப்பி, பரமாத்மாவிடத்திலேயே நிற்கும்படிச் செய்யவேண்டியது. (உசூ)

---

* (உ) (மீ,வி) பரமாத்மாவிடத்திலிருக்கும்படி

உஎ. வ்ரஹ்மாத்மநமஹம்ஹ்ருதம் யொகிநம்ஸுவேத்தமம்।
உவைதிஸாதுரஜஸம் ப்ரஹ்மநிதகல்மஷம்॥

வ்ரஹ்மாத்மநம்	சாந்தமானமனதையுடைய
ஸாதுரஜஸம்	இராஜோகுணமற்றிருக்கிற
ப்ரஹ்மநிதம்*	ஜீவன்முக்தனாயிருக்கிற
நிகல்மஷம்	பாபமற்றவனாயிருக்கிற
வை.நம்	இப்படிப்பட்ட
யொகிநம்	யோகியை
உத்தமம்	சிரேஷ்டமான
ஸுகம்	சுகமானது
உவைதி	{ அடைகிறதென்பது வேதத்தில் பிரசித்தமாயிருக்கிறது.
ஹி	

சாந்தமான மனதையுடையவும், இராஜோகுணமற்றிருக்கிறவும், ஜீவன் முக்தனாயிருக்கிறவும், பாபமற்றவும் யோகியை சிரேஷ்டமான சுகமானது, அடைகிற தென்பதில் சந்தேகமில்லை.(உஎ)

உஅ. யுஞ்ஜந்நேவம்ஸதாத்மாநம் யொகீவிகதகல்மஷ:।
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஸமத்யந்தம்ஸுகமஸ்நுதே॥

ஏவம்	{ இவ்விதமாய் (மேற்சொல்லிவந்த விதமாய்)
ஸதா	எப்போதும்
ஆத்மாநம்†	மனதை
யுஞ்ஜந்‡	சுவாதீனஞ்செய்துகொண்டிருக்கிற
விகதகல்மஷ:§	பாபங்களற்ற
யொகீ	யோகியானவன்
ஸுகேந	பிரயாசையன்றி
ப்ரஹ்மஸம்ஸ்பர்ஸம்¶	பிரம்மதரிசனமாகிய

---

* (ஹா) ஜீவன்முக்தன் என்றால், இறந்தபிறகு அடையும் மோக்ஷசுகத்தை இந்த தேகமிருக்கையிலேயே அடைந்திருக்கிறவன். (ரா) பிரகிருதி சம்பந்தமற்று தன் சுவரூபத்துடனிருக்கிற. (மீ,வி) பிரம்மத்தியானத்தில் நிலைத்திருக்கிற.

† (மீ,வி) பரமாத்மாவை.

‡ (மீ,வி) தியானிக்கிற.

§ (ரா) சகலமான பிராசீனகருமங்களையும் போக்கடித்துக் கொண்டிருக்கிற. (மீ,வி) காமக்குரோதங்களைப் போக்கடித்துக்கொண்டிருக்கிற.

¶ (ஸ்ரீ) பிரம்மைக்கியமாகிய. (ரா) பிரம்மானுபவ ரூபமான. (மீ,வி) பகவானை யடைந்தபிறகு தனக்குண்டாகும்.

சுதர்ஷ்டம் வஸ்துவம் சுஸ்தித } சிரேஷ்டமான சுகத்தை அடைகிறான்.

மேற்சொல்லிவந்த விதமாய், எப்போதும் மனதை சுவாதீனஞ் செய்துகொண்டிருக்கிற பாபங்களற்ற யோகியானவன், பிரயாசையன்றி பிரம்ம தெரிசனமாகிற சிரேஷ்டமான சுகத்தை யடைகிறான். (உஅ)

உக. ஸர்வபூதஸ்தமாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி।
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஷனः॥

வஸர்வத்ர } (பிரம்மாமுதல் ஸ்தம்பபரியந்தமுள்ள) சகலவஸ்துக்களிலேயும்

ஸமதர்ஷனः சமமாய் பிரம்மத்தைப்பார்க்கிற

யோகயுக்தாத்மா } தியானயோகத்திலேயே மனதையுடைய யோகியானவன்

ஆத்மானம் தன்னை

ஸர்வபூதஸ்தம் சகலவஸ்துக்களிலுமிருக்கிறதாகவும்

ஆத்மனி தன்னிடத்திலே

ஸர்வபூதானி சகலவஸ்துக்களுமிருக்கிறதாகவும்

ஈக்ஷதே பார்க்கிறான்.

பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமுள்ள சகல வஸ்துக்களிலேயும் சமமாய் பிரம்மத்தைப் பார்க்கிற தியானயோகத்திலேயே மனதையுடைய யோகியானவன், தன்னைச் சகல வஸ்துக்களிலுமிருக்கிறதாகவும், தன்னிடத்திலே சகல வஸ்துக்களுமிருக்கிறதாகவும் பார்க்கிறான்.

(ஸ) சகல பூதங்களிலுமுள்ள ஆத்மா தானே என்பதாயும், தன்னிடத்தில் சகல பூதங்களைச் சமமாயும் (என்றுல்) ஆத்மா ஒன்றே என்பதாயும், பார்க்கிறவன்தான் யோகி என்பது தாத்பரியம்.

(ஸா) பிரகிருதியிலிருந்து விடுபட்ட (பிரகிருதிவிமுக்தமான) மற்ற ஜீவசுவரூபமும், பிரகிருதி விமுக்தமான தன்னுடைய ஜீவ சுவரூபமும் சமமானதென்பதாகவும், பிரகிருதி விமுக்தமான தன்னுடைய ஜீவ சுவரூபமானது, பிரகிருதி விமுக்தமான மற்ற ஜீவ சுவரூபத்திற்குச் சமமான தென்பதாகவும் பார்க்கிறவன் யோகி. (என்றுல்) தன்னுடைய பிரகிருதி விமுக்த சுவரூபத்தைப்பார்க்கிறவன், மற்றவர்களும் பிரகிருதி விமுக்தர்களாலுல் தன்னுடைய விமுக்த சுவரூபத்திற்குச் சமானமானவர்களென்று நிச்சயங்கொள்ளு

கிறவன் என்பது தாத்பரியம். இந்த அர்த்தமானது, நு - வது அத்தியாயம், கஅ - இந்த அத்தியாயம் கூக - சுலோகங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(இ) (பீ,வி) பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களிலும், பிரம்மமானது ஓரேவிதமாய் இருப்பதாகவும், சகல வஸ்துக்களும் பிரம்மத்தினிடத்தில் விருக்கிறதாகவும் அறிகிறவன் யோகி என்பது தாத்பரியம்.

(ஹா) இந்த சுலோகத்தில் வாக்கியத்தைதே சொல்லுகிற சுருதிகள் அடியில் குறிக்கப்படுகின்றன.

"யஸ்மின்ஸர்வாணிபூதான்யாத்மைவாபூத்விஜானதஃ । ஸர்வத்ரகதேசோகஃ கஸ்ஏகத்வமனுபஸ்யதஃ" (ஈசாவாஸ்யோபநிஷத்; சு-வது மந்திரம்.) "ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம தஜ்ஜலானிதி । ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம தஜ்ஜலானிதி சாந்தஉபாஸீத" (சாந்தோக்யோபநிஷத்.) (உக)

கூ0. யோமாம்பஶ்யதிஸர்வத்ர ஸர்வம்சமயிபஶ்யதி।
தஸ்யாஹம்நப்ரணஶ்யாமி ஸமேநப்ரணஶ்யதி॥

யஃ	எவனொருவன்
மாம்	என்னை
பஶ்யதி	பார்க்கிறானோ
ஸர்வத்ர	எங்கெங்கும்
ச	என்னை
ஸர்வம்	எல்லாம்
மயி	என்னிடத்தில்
பஶ்யதி	பார்க்கிறானோ
தஸ்ய	அவனுக்கு
அஹம்	நான்
நப்ரணஶ்யாமி	கண்ணுக்குப் போகிறதில்லை
ஸ	அவனும்
மே	எனக்கு
நப்ரணஶ்யதி	கண்ணுக்குப் போகிறதில்லை.

எவன் சகல வஸ்துக்களிடத்திலும் (பரமாத்மாவாகிய) என்னையும், என்னிடத்தில் சகல வஸ்துக்களையும் பார்க்கிறானோ, அவனுக்கு நான் கண்ணுக்குப் போகிறதுமில்லை. எனக்கு அவன் கண்ணுக்குப் போகிறதுமில்லை.

(ஸஅ) "நான் அவனுக்கும், அவன் எனக்கும் கண்ணுக்குப் போகிறதில்லை" என்றால், நானே அவன். அவனே நானென்றால் விதேஹமுக்தியென்பது தாத்பரியம்.

(ஈ) ஸவ-பூத=பிரகிருதி விமுக்தாளாயிருக்கிற சகலப்பிராணிகளுடைய சுவரூபங்களுக்கு, ஸாம=சமமான சுவரூபத்தை யுடையவனுக எனனை, யம் = எவன், பஶ்யதி = பார்க்கிறானே அல்லது அறிகிறானே, மயி=என்னுடைய சுவரூபத்திற்கு சமமான சுவரூபமுடையதாக, ஸவ-பூத = பிரகிருதி விமுக்தமான சகல ஆத்ம சுவரூபத்தையும், யம்=எவன், பஶ்யதி=பார்க்கிறானே, தஸ்ய= அப்படிப்பட்ட ஆத்மதரிசனமுள்ள யோகிக்கு, அஹம் = நான், ப்ரத்யக்ஷஸ்ய=பிரத்தியக்ஷமாகவே யிருக்கிறேன். ஸ.ஸ=அவனும், மே=எனக்கு, ப்ரத்யக்ஷஸ்ய=பிரத்தியக்ஷமாகவே யிருக்கிறான்.

(உ) என்னிடத்தில் சகலபூதங்களையும், சகலபூதங்களில் என்னையும் பார்க்கிறவனுடைய, ப்ரத்யக்ஷஸ்ய=யோகக்ஷேமங்களுக்கு நான் பாத்தியப்படாமல் போகிறதில்லை, அவனும் என்னுடைய, ப்ரத்யக்ஷஸ்ய=பக்தனுகாமல் போகிறதில்லை.

(ஊ,வி) ஸவ-பூதஸ்தமாத்மானம்=சகலமான பூதங்களும் என்னுடைய அதீனமானதென்று பார்க்கிறானே, (மற்றவை(உ)போலவே.)

ஈக. ஸவ-பூத-ஸ்தம்யோமாம் பஜத்யேகத்வமாஸ்தித:।
ஸர்வதா வர்தமானோபி ஸயோகீமயிவர்ததே॥

ஸவ-பூத-ஸ்தம்	சகலப்பிராணிகளிடத்திலுமிருக்கிற
மாம்	என்னை
ஏகத்வம் ஆஸ்தித:	} *	அபேதத்தையாசிரயித்து
யம்	எவன்
பஜதி	பஜிக்கிறானே
ஸயோகீ	அந்தயோகியானவன்
ஸர்வதா வர்தமான:	†	எந்தமார்க்கத்தில் பிரவிருத்தித்திருந்தபோதிலும்
மயி வர்ததே	‡	என்னிடத்திலேயேயிருக்கிறான்.

---

* (ஈ) பூர்ணமான ஞானுகாரமாய் ஓவிதமாயிருக்கிற.

† (ஈ) எந்தகாலத்திலும். என்றால், தியானகாலத்திலும் தியானம்விட்டு எழுந்திருந்தகாலத்திலும். (ஊ,வி) நன்மைதீமைகளைச் செய்தபோதிலும்.

‡ (ஸ) வைஷ்ணவ வைஷ்ணவேதர வர்தமானோபி = விஷ்ணு சம்பந்தமாகிய உத்தமபதத்திலிருக்கிற நித்தியமுக்தனுக விருக்கிறான். (ஸ்ரீ) முக்தியை யடைகிறான். (ஈ) தன்னையும், மற்றப்பிராணிகளையும் என்றபத்

சகலப் பிராணிகளிடத்திலு மிருக்கிற என்னை அபேதத்தை யாசிரயித்து (ஒன்றுகவே அபேதமாக அறிந்து) எவன் பஜிக்கிறுனே, அந்த யோகியானவன் எந்த மார்க்கத்தில் பிரவிருத்தித்திருந்தபோதிலும் என்னிடத்திலேயே யிருக்கிறுன். (நக)

நஉ. சூத்ளவமெரு நஸவஃது ஸமம்வஸுதியொஜஃந।
ஸ—வம்வாயஜிவாஹ—ஃம் ஸயொஜீவாஹொஜதஃ॥

ஹெசுஜஃந	ஓ! அர்சுன!
ஸவஃது	எல்லாப்பிராணிகளிடத்திலும்
ஸ—வம்வா	சுகத்தையாவது
யஜிவாஹ—ஃம்	துக்கத்தையாவது
சூத்ளவமெரு நா	தன்னிடத்தில்போல்
ஸமம	சமமாக
யஃ	எவன்
பஸுதி	பார்க்கிறுனே
ஸயொஜீ	அந்தயோகியானவன்
வாஜஃ	சிரேஷ்டனென்று (என்னல்) நிச்சயிக்கப்பட்டிருக்கிறுன்.
உதஃ	

ஓ! அர்சுன! எல்லாப் பிராணிகளிடத்திலும் சுகத்தையாவது, அல்லது துக்கத்தையாவது, தன்னிடத்தில்போல் சமமாக எவன் பார்க்கிறுனே, அந்த யோகியானவன் சிரேஷ்டனென்பது என்னுடைய மதம்.

(ஸ்ம) (ஸ்ரீ) (ஜீ,வி) தனக்கு சுகத்தில் விருப்பும், துக்கத்தில் வெறுப்பும் எப்படியோ அப்படிப்போல், மற்ற பிராணிகளுக்கும் சுகமுண்டாகவும், துக்கமுண்டாகாம லிருக்கவும், கோறி அவ்விதமாய் நடக்கிறவ னெவனே, அவன் சமமாய்ப்பார்க்கிற யோகியாயும், சிரேஷ்டனையு மிருக்கிறுனென்பது கருத்து.

(ஈஈ) பிரகிருதி விமுக்தமான தன்னுடைய ஆத்மசுவரூபத்தில் பிரகிருதி சம்பந்தமான சுகதுக்கங்கள் எப்படி யொட்டுகிறதில்லையோ, அப்படிப்போல, மற்றப் பிராணிகளுடையப் பிரகிருதி விமுக்த ஆத்மசுவரூபத்தில் சுகதுக்கங்க ளொட்டுகிறதில்லை யென்று அறிகிறவன் சிரேஷ்டன். அல்லது பிறருக்குண்டாகும் சுகதுக்கங்களில் எப்படி தான் விருப்புவெறுப்புகளை யடைகிறதில்லையோ, அப்

திற்குச் சமமான ரூபமுடையவர்களாய்ப் பார்க்கிறுன். (உ) (ஜீ,வி) மோக்ஷத்திலிருக்கிறுன்.

படிப்போலவே, தனக்குண்டாகும் சுகதுக்கங்களிலில் தான் விருப்பு வெறுப்புகளை யடையாம லிருக்கிறவன் சிரேஷ்டனென்பது என்னுடைய அபிப்பிராயம். (உஉ)

சுஜ்ஞ-நவாச.

உஉ. யொயம்யொமஸ்யாவ்ருத்தஸ்வாமய்யபஸ்ருத.
வ்யதஸ்யாஹம்நவேஷ்யாமி வத்துமுக்வாசஸ்ருணுஷ்வதத்.

சுஜ்ஞ-நவாச	அர்சுனன் சொல்வது
மய்யபஸ்ருத	ஓ! மதுசூதன! (கிருஷ்ணசுவாமியே)
முக்வா	உம்மாலே
ஸாம்யேந	சாம்மியமாகிய (சமமாயறிவதாகிய)
யொயம்	யாதொருயோகமானது
யொயம்	
ப்ரோக்தம்	சொல்லப்பட்டதோ
வ்யதஸ்ய	இந்தயோகத்தினுடைய
ஸ்திராம்	நிலையான அல்லது ஸ்திரமான
ஸ்திதிம்	இருப்பை
வத்துமுக்வாச	(மனது) சஞ்சலமுள்ளதாகையால்
அஹம்	நான்
நவேஷ்யாமி	பார்க்கவில்லை (தெரிந்துக்கொள்ளவில்லை.)

ஓ! மதுசூதன! உம்மாலே, சமமா யறிவதாகிய யாதொரு யோகமானது சொல்லப்பட்டதோ, அந்த யோகத்தினுடைய ஸ்திரமான இருப்பை, மனது சஞ்சலமுள்ளதாகையால், நான் தெரிந்துகொள்ளவில்லை.

(ஙம) சகல வஸ்துக்களையும், பிரம்மமாகவும், பிரம்மத்தை சகல வஸ்துக்களாகவும் சமமா யறியவேண்டுமென்பதாய்ச் சொன்னீர். மனது சஞ்சலமானதால் அப்படிப்பட்ட அபேதபுத்தி ஸ்திரமாயுண்டாவது மிகுந்த பிரயாசையென்பது அர்சுனன் தாத்பரியம்.

(ஸ்ரீ) பிரம்மத்தியானத்தில் சலிக்காமலும் ஸ்திரமாயும் மனசைநிறுத்தவேண்டுமென்று சொன்னது அசாத்தியமானதென்பது அர்சுனன் தாத்பரியம்.

(ஸா) (உஉ-உச-சுலோகங்களைச் சேர்த்து பாஷியம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது) பிரகிருதி சம்பந்தத்தினால் தேவதைகள் வேறே, மனிதர்கள் வேறே, மற்ற ஜந்துக்கள் வேறே என்று தோற்றுகிறது. பிரகிருதிசம்பந்தம் நீங்கினால் எல்லா ஆத்மசுவரூ

பங்களும் ஞானகாரங்க ளானதிலே தேவமனுஷியாதி பேதமில் லாமல் சமமாகவே யிருக்கும். அப்படி பிரகிருதிசம்பந்தம் நீங்கிய ஞானகாரமாயிருக்கிற ஆத்மாவும், பரமாத்மாவும் பேதமுள்ளவர்க ளானலும், பரமாத்மாவுக்கு எப்படி பிரகிருதி சம்பந்தமும், கருமா திகளு மில்லையோ, அப்படிப்போல பிரகிருதி விமுக்த ஆத்மாக்களு க்கு மில்லை. ஆகையால் ஜீவேசுவர ஆகாராபேதமான சமத்துவம் சொல்லப்பட்டது. அதை யறிகிறது தான் சம தெரிசனயோக மென்பதாகவும் சொன்னீர். இது அசாத்தியமா யெனக்குத் தோற்றுகிற து. ஏனென்றால், ஜீவனுடைய கருமவாசனையிலே அவனுடைய மனதானது வெகுகாலமாய் எப்போதும் விஷயங்களில் முழுகி, அந் தவிஷயங்களிலுங்கூட ஒருநிலையை யடையாமல் சஞ்சலமாகவே யி ருக்கிறது. இப்படி வெகுகாலப் பழக்கத்திலே வையிரமேறி யிருக் கிற இந்த மனதை என்றைக்கும் காணுததும், கேட்காததும், நினைக் காததுமாகியப் பிரகிருதி விமுக்த ஆத்ம சுவரூபசாம்மிய தரிசனமா கிற தியானயோகத்தில் நிலையாய் வைத்திருக்கவேண்டுமென்றால், எப்படி சாத்தியமாகும். பெருங்காற்றைத் தடுத்து நிறுத்துவது எப்படி அசாத்தியமோ அப்படிப்போல தடுக்கக்கூடாததாயும், பல வந்தமாய் தன்னிச்சைப்படிப் பிரவேசிக்கிறதாயு மிருக்கிறமனதை நிறுத்துவது அசாத்தியமென்பது அர்சுனன் தாத்பரியம்.

(மீ,வி) சகலப் பிராணிகளிடத்திலும் பரமாத்மாவை ஓரோவி தமாய்ப் பார்க்கிறதாகிய சம தெரிசனயோகமும், சுகதுக்கங்களில் தன்னைப்போலவே சகலப் பிராணிகளையும் பார்க்கிறதாகிய சமதெ ரிசனயோகமும் சொன்னீர். அதில் மனசு நிலைத்திருப்பது அசாத்தி யமென்பது அர்சுனன் தாத்பரியம். (௫௫)

௬௰. வத்யுயம் ஹிஶ நம்கூஜ்ஞ ஏரசாயிலையவஜ்ஜ்ஞ।
தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்॥

ஹெகூஜ்ஞ	ஓ ! கிருஷ்ணசுவாமியே !
உநம்	மனசானது
வத்துயம்	(சுவபாவமாகவே) சஞ்சலமுள்ளதாயும்
ஏரசாயி	{(தேகேந்திரியங்களை) புரட்டுகிற அல்லது கலங்கச்செய்கிறதாயும்
வலவசு	அடங்காததாயும்
ஊஜ்ஹி	{(விஷயங்களில்) கெட்டியாய்ப்பற்றுதலுடையதாயுமிருக்கிறது.
தஸ்ய	அந்த மனதினுடைய (அந்தமனதை)
நிக்ரஹம்	அடக்குவதை

வாயொரிவ	காற்றைப் (அடக்குவது) போல
ஸுதுஷ்கரம்*	மிகவும் அசாத்தியமாக
சுஹம்	நான்
மெநு	எண்ணுகிறேன்.

ஓ! கிருஷ்ணசுவாமியே! மனசானது, சுவபாவமாகவே சஞ்சலமுள்ளதாகவும், தேகேந்திரியங்களைக் கலங்கச்செய்கிறதாகவும், அடங்காததாகவும், விஷயங்களில் கெட்டியாய்ப் பற்றுதலை யுடையதாகவுமிருக்கிறது. அந்த மனதினுடைய அடக்குதலானது, காற்றைப் (பிடித்து கரகத்திலடக்குவது) போல் மிகவும் அசாத்தியமாக நான் எண்ணுகிறேன். (உசு)

ஸ்ரீ ஹவாந-வாச.

உஞ. சுஸம்ஸயம்மஹாபாஹோமநோது-நிக்ரஹம்சலம்।
சுஹ்ருமெநதது-சுளெய மெவாமெருணவ்ருஹ்யதெ॥

ஹவாந-வாச	கிருஷ்ணபகவான் சொல்வது
மஹாபாஹோ	புஜபலமுள்ள
மெகுளம்தெய	ஓ! அர்சுன!
மநோ	மனதானது
து-நிக்ரஹம்	அடக்குவதற்கு மிகவும்பிரயாசையானது
சலம்	சஞ்சலமுள்ளது
(ஹதுது)	என்பதில்
சுஸம்ஸயம்	சமுசயமில்லை
(தயாவி)	அப்படியிருந்தபோதிலும்
சுஹ்ருமெநதது-†	பழக்கத்திலேயும்
மெவாமெருணவ‡	(விஷயங்களை) வெறுப்பதிலேயும்
ருஹ்யதெ	அடக்கப்படுகிறது.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்வது. புஜபலமுள்ள ஓ! அர்சுன! மனதானது அடக்குவதற்கு மிகவும் பிரயாசமான தென்பதிலும், சஞ்சலமுள்ளதென்பதிலுஞ் சந்தேகமில்லை. அப்படி யிருந்தபோதிலும் பழக்கத்திலேயும், விஷயங்களில் வைராக்கிய மடைவதிலேயும் அடக்கப்படுகிறது.

---

* (வுா) மிகவும் பிரயாசை, மிகவும் வருத்தமானது, என்றும் அர்த்தமுண்டு.

† (ரா) ஆத்மாவானவன் சத்குணகாரமென்கிற அப்பியாசத்திலுண்டாகிற பிரியம்.

‡ (ரா) விஷயங்கள் தோஷாகாரமானவையென்று அப்பியாசத்திலே தெரிந்து விஷயங்களைவிட்டு மனசு விலகுவதுதான் வைராக்கியம்.

(ஸ்ரீ) (ஸ்ரீமா.) "உநலொவுதீஸுநுலவு ஹுஹாகாதயாஷ்டீ:। "யாலம்வுஜூதநாசாலள லசாயிஹியீயதே॥ = பிரவிருத்தியற்ற "மனதினுடைய பிரம்ம சுவரூபமாயிருக்கிற ஸ்திதியெதுவோ வது "சுலம்வுஜூதசமாதியென்று சொல்லப்படுகிறது." (யோகசாஸ்திரம்.) (உரு)

உசூ. சுலம்யதாத்நாயொமொ உஷ்ஹுாவஹுதிஜெதீ:।
வஸுாத்நாதயததா ஸகெவுாவாவ்ஷிவாயதீ:॥

சுலம்யதாத்நா	அடக்கப்படாதமனதையுடையவனுலே
யொமீ*	யோகமானது
உஷ்ஹுாவஹுதி	அடையக்கூடியதல்லவென்பது
மெ	என்னுடைய
உதீ:	நிச்சயம்
வஸுாத்நா	அடக்கப்பட்டமனதையுடையவனுய்
யததாத:	முயற்சிசெய்பவனுலே
உவாயதீ:†	(அப்பியாசம், வைராக்கிய மிந்த) உபாயத்தினுலே
சுவாவ்ஷ:	அடைகிறதற்கு
ஸகுவீ:	ஸாத்தியமானது.

அடக்கப்படாத மனசையுடையவனுலே யோகமானது அடையக்கூடியதல்ல வென்பது என்னுடைய நிச்சயம். அடக்கப்பட்ட மனசை யுடையவனுய் முயற்சி செய்பவனுலே அப்பியாசம், வைராக்கிய மிந்த வுபாயங்களினு லடைகிறதற்குச் சாத்தியமானது. ()

சுஜ்ஜுநவாச.

உக. சுயதிஸ்ரூ ஜயொவெதா யொமாச்சுலீதசாநஸீ:।
சுஷ்ரூாவவுயொமவஸம்ஹிஜிம் சுாம்மதிம்சுஷ்ஹுண்ஹு தீ॥

சுஜ்ஜுநவாச	அர்சுனன்சொல்வது
ஹெசுஷ்ண‡	ஓ! கிருஷ்ணசுவாமியே!

---

* (ஈா) சமதெரிசன யோகமானது.

† (ஈா) முன் சொல்லப்பட்டிருக்கிற என்னுடைய ஆராதனுரூபமானதும் ஞானத்தை யடக்கிக்கொண் டிருக்கிறதுமான கருமயோகமாகிற உபாயத்தினுல்.

‡ (ஹ்வா) முதலத்தியாயம், உஅ-வது சுலோகத்தினடியில் அர்த்தமெழுதப் பட்டிருக்கிறது. பக்தர்களுடைய பயங்களைப் போக்கடிக்கிறதினுல் கிருஷ்ணனென்கிற பெயர்வந்தது.

ஸ்ரத்தயா உபெதஃ	நம்பிக்கையுடன்கூடியோகத்தில்பிரவேசித்து
அயதிஃ	(பூர்ணஞ்செய்ய) முயற்சி யில்லாதவனுய்
யொகாத	யோகத்திலிருந்து
சலித்தாநஸஃ	நழுவி விஷயத்தில்பிரவேசித்த மனதையுடையவன்
யொகஸம்ஸித்திம்	யோகத்தினுலுண்டாகும்பலனை
அவாப்நொதி	அடையாமல்
காம்	என்னகெதியையடைகிறுன்.
கதிம்	
கஹ்ண	

அர்சுனன் சொல்வது. ஓ! கிருஷ்ணசுவாமியே! நம்பிக்கையுடன்கூடி யோகத்தில் பிரவேசித்து (ஆனல்) பூர்ணமாய்ச் செய்ய முயற்சி செய்யாததினல், யோகத்தைவிட்டு நழுவி விஷயங்களில் பிரவேசித்த மனதையுடையவன் (யோகபிரஷ்டனென்று இவன் சொல்லப்படுகிறுன்.) யோகத்தினுலுண்டாகும் பலனை படையாமலென்ன கெதியை யடைகிறுன்.? (கஎ)

கஅ. கச்சின்நாபயவிப்ரஷ்ட ஸ்சின்நாப்ரஹ்மணஃபதி।
அப்ரதிஷ்டொமஹாபாஹொ விமூடொ ப்ரஹ்மணஃபதி॥

மஹாபாஹொ	ஓ! புஜபலமுடையவனே!
உபயவிப்ரஷ்டஃ	(கருமமார்க்கம், யோகமார்க்கம்) இரண்டுங்கெட்டு
அப்ரதிஷ்டஃ	ஆசிரய (பிடிப்பு) மற்று
ப்ரஹ்மணஃபதி	பிரம்மத்தையடையு முபாயத்தில்
விமூடஃ	ஞானமில்லாதவன்
சின்நாப்ர	சிதறிப்போன மேகம்போல
நஸ்யதிகச்சித்	நாசமடைய மாட்டானு.

ஓ! புஜபலமுடைய கிருஷ்ணசுவாமியே! கருமமார்க்கம், யோகமார்க்க மிரண்டுங்கெட்டு ஆசிரயமற்று பிரம்மத்தை யடையு முபாயத்தில் ஞானமில்லாதவன், சிதறிப்போன மேகம்போல நாசமடைவானு? அல்லது ஒருபோது மடையமாட்டானு?

(ஸ்ரீ) எப்படி இரண்டுங் கெட்டவனுகிறுனென்றுல், யோகத்தில் பிரவேசித்ததினல், இப்போது கருமாநுஷ்டானமுமில்லை. முன் செய்த கருமங்களினுடைய பலனை ஈசுவரார்ப்பணஞ் செய்துவிட்டானுகையால், கருமங்களுடைய பலனுகிய சுவர்க்காதி சுகபலனு

மில்லை. அப்பியாசம், வைராக்கியமுதலிய சாதனங்களிலே முயற்சி யின்மையால் ஞானயோக சித்தியையடைந்து மோக்ஷபலனையடைய வேதுவுமில்லை யென்பதே.

"ஆசிரயமற்ற" என்றால், கருமத்தில் பிடிப்புமில்லை. ஞானமடையும் வழியான யோகத்தில் பிடிப்புமில்லை யென்பதே.

"பிரம்மத்தை யடையுமுபாயம்" என்பது - மனோநிக்கிரகம், இந்திரியநிக்கிரகம், சமதமாதிகள், விடாமுயற்சி, வைராக்கிய முதலியவைகளே.

"சிதறிப்போன மேகம்போல நாசமடைவது" என்றால், கூட்டமாய்ச் சேர்ந்திருக்கிற மேகங்கள் காற்றினால் பிரிக்கப்பட்டு பல பிரிவுகளாய் விடுகின்றன. அப்படி பிரிந்த (சிதறின) மேகமானது, தானெதிலிருந்து பிரிந்ததோ அந்த மேகத்துடன் மறுபடிபோய்ச் சேராமலும், அல்லது வேறே மேகங்களுடன் சேராமலும், அதின் சுவரூபம் காணப்படாமலே நாசத்தையடையும். ஆகையாலிதைத் தியானத்திலிருந்து நழுவின யோகப்பிரஷ்டனுக்கு திருஷ்டாந்தமாய்ச் சொல்லப்பட்டது.

(ஈ) உஹயவிஹ்ரஷ்டஃ = இரண்டுங்கெட்டவன். எப்படியென்றால், கூஹ்ரதிஷ்டஃ= சுவர்க்காதி பிராப்திக்கு ஏதுவான கருமபலனைத் தியாகம் செய்வதினாலே சுவர்க்காதிகள் கிடைக்கும்படிச் செய்துக் கொள்ளாதவன். விசலிஹொஹ்ரஹணஃ வர்த்மி = பிரம்மத்தை யடையத் தகுந்த யோகமார்க்கத்தை விட்ட அக்கியானி.

(ஸீ,வி) உஹயவிஹ்ரஷ்டஃ = சுவர்க்கமுமில்லை. மோக்ஷமுமில்லை. அல்லது சுவர்க்கப்பிராப்திக்குச் சாதனமான காம்மியகருமமுமில்லை. மோக்ஷத்திற்குச் சாதனமான பூர்ணமானத் தியாகயோகமுமில்லை. அல்லது இந்த உலக சுகமுமில்லை. பரலோக சுகமுமில்லை. ஆகையாலிரண்டுங் கெட்டவனென்று சொல்லப்பட்டது. (ஈஅ)

ஈ.சூ. ஹ தம்ஜிஹ்ஸம்ஸயம்கூஷ ஹெத்ஃ-ஜிஹ்ஸிதம்।
கூஹ நர்வ்ஹ்ஸம்ஸயஸ்யாஸ்ய ஹெத்தா நஹ்ய்-உபபத்யதெ॥

ஹெ! கூஷ!	ஓ! கிருஷ்ண சுவாமியே!
ஜெ	என்னுடைய
ஹ தம்	} இந்தச் சந்தேகத்தை
ஸம்ஸயம்	
கூஸிதம்	முழுவதும்
ஹெத்ஃ-ம்	நிவர்த்திக்க
சஹ்ஸி	அருகராயிருக்கிறீர்

சுஸ்வ ஸாஸ்யஸ்ய	} இந்தச் சங்தேகத்தினுடைய
ஸர்வதா	நிவர்த்தியைச்செய்கிறவன்
கஸ்ய	உம்மைத்தவிரவேறுருவன்
நஹ்யுபபத்யதே	கிடையாது.

ஓ! கிருஷ்ணசுவாமியே! என்னுடைய இந்தச் சங்தேகத்தை முழுதும் நிவர்த்திக்க அருகராயிருக்கிறீர். இந்தச் சங்தேகத்தை நிவர்த்திசெய்ய உம்மைத்தவிரத் தகுந்த மற்றொருவன் கிடையாது. (உக)

ஸ்ரீ ஹரவாநுவாச.

சஅ. வாயுர்யமக்நிரம்ருதம் ப்ரஜாபதிஸ்த்வம்ப்ரபிதாமஹஸ்ச
நமோநமஸ்தேஸ்துஸஹஸ்ரக்ருத்வஸ்புனஸ்சபூயோபிநமோநமஸ்தே॥

ஸ்ரீ ஹரவாநுவாச	பகவான்சொல்வது
தாத	அப்பா! அல்லது குழந்தாய்!
ஹேவாயோ	ஓ! அர்சுன!
தஸ்ய	அவனுக்கு (யோகப்பிரஷ்டனுக்கு)
இஹ	இந்தலோகத்திலும்
விநாஸ்ஃ*	நாசமானது
நைவவித்யதே	உண்டாகிறதேயில்லை
ந	பரலோகத்திலும்
ந	நாசமானதுண்டாகிறதேயில்லை
கஸ்சித் கல்யாணக்ருத்	} † சத்கருமத்தைச்செய்கிற ஒருவனும்
துர்கதிம்	கெதியை
தாத நஹிகச்சதி	அடைகிறதில்லை.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்வது—குழந்தாய்! அர்சுன! யோகப்பிரஷ்டனுக்கு இந்தலோகத்திலாவது, பரலோகத்திலாவது கெதியுண்டாகிறதேயில்லை. சத்கருமத்தைச்செய்த ஒருவனும் கெதியை யடைகிறதில்லை. (சஅ)

---

* (ஸா) பூர்வஜன்மத்தைப்பார்க்கிலும் தாழ்ந்த ஜன்மமானது. (ஸ்ரீ) தோஷமாவது, நரகப்பிராப்தியாவது. (ஸ) சுவர்க்காதி அனுபவம், பிரம்ம பிராப்தி இவைகளில் தான் கோறினது கிடைக்காமல் போகிறதாகிய விநாசம். அல்லது ஆரம்பித்தகாரியத்தை மத்தியில் விட்டுவிட்டதினாலுண்டானதோஷம். (ஸ்ரீ,வி) இந்தலோகத்தில் மிருகாதி ஜன்மங்களாவது, பரலோகத்தில் நரகமாவது.

† (ஸ்ரீ,வி) ஆஸ்திகபுத்தியுடன் கொஞ்சகாலமாவது, ஈசுவராராதனை செய்த ஒருவனும்.

சக. வுாவவுவ-ணவுகூதாம்மொகா ந-ஷிகுவாஸுாஸுதீஷ்வுஹோ,
ஸுஷீநாம்ஸ்ரீஉதாம்மெஹெ யொமஹுஷ்டாஹிஜாயதித॥

யொமஹுஷ்டிம்	(யோகஞ்செய்தும் பூர்ணமாய்ச் செய்யாமல் விட்டுவிட்டவனுகிய) யோகப்பிரஷ்டன்.
வ-ணவுகூதாம்	புண்ணியஞ்செய்தவர்களுடைய
மொகாநு	உலகங்களை
வுாவவு	அடைந்து
ஸாஸுதீம் வுஷோம்	வெகுகாலம்
உஷிகுவா	சுகமாயிருந்து
ஸுஷீநாம	சதாசாரமுள்ள
ஸ்ரீஉதாம	ஐசுவரியவான்களுடைய
மெஹெ	வீட்டில்
கூஹிஜாயதித	பிறக்கிறுன்.

யோகப் பிரஷ்டனுனவன் (அசுவமேதாதி கிருதுக்கள் செய்த) புண்ணியமுடையவர்கள் எந்தலோகத்தை யடைவார்களோ அந்தலோகங்களை யடைந்து வெகுகாலம் சுகமாயிருந்து (பிறகு) சதாசாரமுள்ள ஐசுவரியவான்களுடைய வீட்டில் பிறக்கிறுன்.

(ஸா) எந்தவிஷயானுபவத்தை யிச்சித்து யோகத்தை விட்டுவிட்டானே, அந்த விஷயானுபவத்தைப் புண்ணிய லோகங்களில் தனக்கிஷ்டமான காலம்வரையிலனுபவித்து, பிறகு இந்த லோகத்தில் சுத்தமும், ஐசுவரியமுமுள்ள யோகத்திற்கு யோக்கியமான குலத்தில் பிறக்கிறுன். (சக)

சஉ. அதவாயொகிநாமெவ கூலெஹவதியீத்ருசாம்,
வதத்ருசிதரமுஹதாம் மொகெஜந்மயதீத்ருஸம்॥

அதவா	அல்லது
யீத்ருசாம்	ஞானிகளான
யொகிநாம்*	யோகாப்பியாசஞ்செய்கிறவர்களுடைய
கூலவதவ†	குலத்திலேயே
ஹவதி	ஜனிக்கிறுன்
மொகெ	இந்தலோகத்தில்
ஈத்ருஸம்	இப்படிப்பட்ட
ஜந்ம	பிறவியானது

---

* - † (ஸா) யோகிகளான தரித்திராளுடைய குலத்திலே.

யசு	எதுவோ
வைதசி	இதானது
ஊமுஹதரம்	மிகதுர்லபமானது. (மிகஅரிது)

அல்லது ஞானிகளான யோகாப்பியாசஞ்செய்கிறவர்களுடைய குலத்திலேயே ஜநிக்கிறான். இந்த லோகத்தில் இப்படிப்பட்ட பிறவியானது, அதிக துர்லபமானது.

(ரா) முந்திய சுலோகத்தில் குறிக்கப்பட்டவன், சொற்பகாலம் யோகாப்பியாசஞ்செய்து பிறகு விட்டுவிட்டவன். இந்தச் சுலோகத்தில் குறிக்கப்பட்டவனே, வெகுகாலம் யோகம் செய்துவந்து சித்தியடையும் சமயத்தில் விட்டுவிட்டவன். வைதசி = இதானது, என்றால், முந்திய சுலோகத்தில் சொன்னபிறவியும், இந்தச் சுலோகத்தில் சொன்னபிறவியும். (சஉ)

சஎ. ததர தம்வை-ஜிலம்யொமம் யஹி தவளவ-ுமிஹெஹிகம்।
யததி தவ தமிதாஹ-ுய ஹ்ஸைஜளக-ார-நந்த நா॥

ஹெக-ார-நந்த	ஓ! குருவம்சத்தில் ஜனித்தவனே!
தத	அதில் (அப்படிஜனிக்கும் ஜன்மத்தில்)
வளவ-ுமிஹெஹிகம்	பூர்வதேகவாசனையிலுள்ளவனாகுன்டான
தம்	அப்படிப்பட்ட
வை-ஜிலம்யொமம்	புத்திசம்பந்தத்தை
யஹித	அடைகிறான்
ததம்	அதற்குப்பிறகு
ஹ-ுயம்*	மறுபடியும்
ஹ்ஸைஜள	{(பூர்வஜன்மத்தில் விட்டுப்போன யோக) சித்தியையடைவதிலே
யதமிதவ	பிரயத்தினஞ்செய்கிறான்.

ஓ! அர்சுன! அதில் (மேல்கண்டவிதமாய் கல்லாலத்தில் ஜனித்த ஜன்மத்தில்) பூர்வதேகவாசனை (முன்ஜன்மத்தில் செய்து நிறைவேறாமல்போன யோகமாகிய வாசனை)யினால் தனக்குன்டான அப்படிப்பட்ட (யோகஞ்செய்ய முயற்சியுள்ள) புத்தி சம்பந்தத்தை யடைகிறான். அதன்பிறகு பூர்வஜன்மத்தில் விட்டுப்போன அந்த யோக சித்தியை அடைவதில் மறுபடி பிரயத்தினஞ் செய்கிறான்.

(ஙா) ஸ்ரீ இராமாநுஜர் தவிர மற்ற பாஷியக்காரர்களும், வியாக்கியாதாக்களும், சஎ-வது சுலோகத்தின் முந்திய அரைச் சுலோ

---

* (ஙா) (ஸ்ரீ,வி) அதிகமாய்.

கத்தை, இந்தச் சுலோகத்துடன் சேர்த்து அன்வயம் செய்திராவிட்டாலும், இந்தச் சுலோகத்துடன் சேர்ந்ததாகவே அர்த்தஞ் செய்திருக்கிறார்கள். மேலும், பிந்திய அரை சுலோகத்திற்குச் செய்திருக்கிற அர்த்தமானது, இந்த சஉ-வது சுலோகத்திற் குறிக்கப்பட்டவனைக்குறிக்காமல் வேறே தனியானை ஜீஜ்ஞாஸுவைக்குறிக்கிறது. (ரா) அடுத்தச் சுலோகத்தின் முந்தியபாகத்தை இத்துடன் சேர்த்து அர்த்தஞ் செய்திருக்கிறார். (சஉ)

சஎ. யமவாப்நோதி யத்கிஞ்சித் தத்கிருத்வா விஸுத்யதி।
ஜிஜ்ஞாஸுரபியோகஸ்ய ஸப்3ரஹ்மாதிவர்ததே॥

யத்கிஞ்சித்	அந்தபூர்வ (ஜன்ம) அப்பியாசத்தினாலே தானே
யமவாப்நோதி	பரதானையும்
தத்கிருத்வா	அவன் (பூர்வ ஜன்மத்தில் யோகப்பிரஷ்டனானவன்)
விஸுத்யதி	(விஷயங்களிலிருந்து யோகத்திற்கு) இழுக்கப்படுகிறான்
ஜிஜ்ஞாஸுரபியோகஸ்ய	யோகத்தையப்பியசிக்க வேண்டுமென்கிற இச்சையுள்ளவனுக்கூட
ஸப்3ரஹ்மாதிவர்ததே	வேதோக்த கருமபலத்தை
	அதிக்கிரமிக்கிறான். (தானே யோகத்திற்குப் பாத்திரமாகிறான்.)

அந்த பூர்வ ஜன்மாப்பியாசத்தினாலேதானே பரதானையும் அவன் (பூர்வஜன்ம யோகப்பிரஷ்டன்) யோகத்திற்கு இழுக்கப்படுகிறான். யோகத்தையப்பியசிக்க வேண்டுமென்கிற விச்சையுள்ளவனுக்கூட (அவன் அடுத்த ஜன்மத்தில் அந்தவிச்சையாகிய பூர்வஜன்ம யாசனையினாலே) வேதோக்தமான கருமபலனை அதிக்கிரமிக்கிறான். (என்றால், வேதத்தில் கருமங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற சுவர்க்காதிபலனை யபேக்ஷிக்காமல் யோகநிஷ்டையையே யிச்சித்து அதில் பிரவிருத்திக்கிறான்.)

(சஎ) (ஸ்ரீ)ஜிஜ்ஞாஸு-ரபி = யோகத்தை யறியவேண்டுமென்றிச்சித்து, அதில் பிரவிருத்தித்த சங்கியாசியுங்கூட, என்று தாத்பரியம்.

முந்திச் சொல்லப்பட்டிருக்கிற யோகப்பிரஷ்டனைக் காட்டிலும் இவனுக்கு முக்தியடையுங்காலம் கீழ்த்தாகும்.

ஸப்3ரஹ்மாதிவர்ததே = வேதோக்த கருமங்களுடைய பலனைக்காட்டிலும், அதிகபலனை யடைகிறானென்பது தாத்பரியம்.

ஸெஉ-தீகூநுாயம - என்று கிரகிக்கத்தக்கது (அதாவது, ஜீஜூ ஸ-வுக்கு இந்தப்பலனுஞல் மூந்தியவனுடைய பலனின்னதென்று சொல்லவும் வேண்டுமோ? என்பதே.

(ஈா) (இந்தச் சுலோகத்தின் பிந்திய அரை சுலோகத்திற்கு), யொமஸு = யோகத்தை, ஜீஜூாஸ-ஃ = தெரிந்துகொள்ளவேண்டு மென்கிற விச்சையுள்ளவன், அந்த ஜன்மத்திற் தெரிந்துகொள்ளா விட்டால், அடுத்த ஜன்மத்தில் தெரிந்து, அநுஷ்டித்து, ஞானியாய், ஸஷ்ஹ = தேவ, மனுஷிய, பூமி, சுவர்க்காதி சப்தங்களால் (பெயர்க ளால்) சொல்லத்தகுந்த, ஸ்ரஹ்ம = பிரகிருதியை, சுதிவத-ுதெ = அதிக்கிரமிக்கிறான். என்றால், ஞானமந்த சுவரூபமான ஆத்ம சுவரூ பத்தை யடைகிறான்.

(உ) ஸஷ்ஹஸ்ரஹ்ம = பரமாத்மாவை, சுதிவத-ுதெ = கிரமக் கிரமமாய் அடைகிறான். எப்படிக் கிரமக்கிரமமா யடைகிறானென் பது அடுத்த சுலோகத்திலுல் சொல்லப்படுகிறது.

(ஸீ.வி) ஸஷ்ஹஸ்ரஹ்ம=வேதத்திலுள்ளவிதி நிஷேதங்களை, சுதி வத-ுதெ=அதிக்கிரமிக்கிறான். என்றால், முக்தனய்விடுகிறானென் பது தாத்பரியம். இது (ஸெஉ-தீகூநுாயம்) கைமுத்திக நியாயம்.()

சஞ. வுயதூஹு்தசா நஸ-ு யொஸீவஸ்ஸ-ுஜகிஷ்வுஷ்ஃ
சுநெகஜந்மஸம்ஸிஜ்ஜ ஸ்ஸெதாயாதிவாாம்மதிம்॥

வுயதூஹு்	முயற்சியிலை
யதசா நஸ-ு	யோகாப்பியாசஞ்செய்கிற
யொஸீ	யோகியானவன்
ஸஸ்ஸ-ுஜகிஷ்வுஷ்ஃ	பாபத்திலிருந்துவிடுபட்டவனும்
சுநெகஜந்மஸம்ஸிஜ்ஜ	அநேகஜன்மங்களில் (ஞான) சித்தியை யடைந்தவனும்
ததஃ	அதற்குப்பிறகு
வாாம் மதிம் யாதி	உத்தமமானகதியை (மோக்ஷத்தை) அடைகிறான்.

முயற்சியிலை யோகாப்பியாசஞ் செய்கிற யோகியானவன், பாபத்திலிருந்து விடுபட்டு அநேக ஜன்மங்களில் செய்தயோகத்தி னலை ஞானசித்தியை யடைந்து, பிறகு மோக்ஷத்தை யடைகிறான். (இந்த யோகியானவன், முந்திய சுலோகத்தின் முதல்பாகத்தில் சொல்லியிருக்கிற யோகியே. ஜீஜூாஸ-ு, அல்ல.)

(ஸா) சுவெநகூஜந்ஹ=அநேக ஜன்மங்களில் சம்பாதித்த புண்ணிய கருமங்களால், வம்ஸ்ரூபகில்விஷம் = பாபங்களைப் போக்கடித்துக் கொண்டவனையும், வம்ஹிஜம் = சித்தியை யடைந்தவனையும், பூய் தாசுயதஜாநஸ்ரூ = மறுபடியும் யோகத்தில் பிரயத்தினஞ் செய்கிற வனுமிருக்கிற, யொகீ = யோகியானவன், யோகத்திலிருந்து சலித்தபோதிலும், தத்ம்=யோகாப்பியாச மகிமையிலே, பராம்கதிம் யாதி=மோசகத்தை யடைகிறான்.

(உ) (ஸீ,வி) முந்திய சுலோகத்தில் குறிக்கப்பட்ட ஜ்ஞாவஸ்ரூ, விஷயமாய் இந்தச்சுலோகம் பிரவிருத்தித்ததாக அறியத்தக்கது. ()

சுசஙூ. தவஸிஹவுர்உயிகொயொகீ ஜ்ஞாநிஹவுர்அதிகஸ்தாயிகஸ்ம்
கர்மிப்யஸ்சாயிகொயொகீ தஸ்மாத்யோகீபவார்ஜுந!!

யொகீ	தியானயோகியானவன்
தவஸிஹவுர்*	தபசுசெய்கிறவர்களைப்பார்க்கிலும்
அதிகஸ்தாயிகஸ்ம்	அதிகமானவன்
ஜ்ஞாநிஹவுர்	சாஸ்திரஞானமுள்ளவர்களைப்பார்க்கிலும்
அதிகஸ்தாயிகஸ்ம்	அதிகமானவன்
யொகீ	தியானயோகியானவன்
கர்மிப்யஸ் (ஐதி)	கருமங்களைச்செய்பவர்களைப்பார்க்கிலும்
சாயிகஸ்ம் (ஐதி)	அதிகமானவனென்று
மதம்	எண்ணப்பட்டிருக்கிறான்
தஸ்மாத்	ஆகையால்
தவொர்ஜுந	ஓ! அர்சுன!
யொகீபவ	யோகியாகக்கடவாய்.

தபசுசெய்கிறவர்கள், சாஸ்திரஞானமுள்ளவர்கள், கருமஞ்செய்பவர்கள், இவர்களைப்பார்க்கிலும், தியானயோகி சிரேஷ்டனென்பது என்னுடையமதம். ஆகையினாலே, ஓ! அர்சுன! யோகியாகக்கடவாய்.

(ஸா) தபசு, சாஸ்திரஞானம், கருமமிவைகளைக் காட்டிலும் யோகமெப்படி சிரேஷ்டமென்றால், இம்மூன்றும் தியானயோகியினிடத்திலேயே யிருக்கின்றன; அத்துடன் தியானயோகமுஞ் சேர்ந்திருப்பதினால் தியானயோகி சிரேஷ்டனே. எனென்றால், இவன் இராகத்துவேஷாதிகளற்றவனாகிறானதினால் தான். (சுசூ)

---

* (ஸ்ரீ) (ஸீ,வி) கிருச்சிர சாந்திராயணாதி விரதங்கள். அதாவது, தேகபலஞ்குறைக்கச்செய்யப்படும் விரதங்கள். இந்த விரதங்களுடன், மந்திரங்களை உருவேற்றுகிறதுமுண்டு. இதுதான் தபசு.

சன. யொகிநாஉவிஸவெ-ுஷாம உூதெதநாஹூாதுநா,
ஸ்ரூஜாவாநுஹஜிதயொஉம ஸவெயாகுதஹொஉதம்॥

ஸவெ-ுஷாஉவி யொகிநாம (உஜெவ)	} சகலவிதமானயோகிகளுக்குள்ளேயும்
யம்	எவன்
உூதெதந சுஹாஹூாதுநா	} என்னிடத்தில்நிறுத்தப்பட்டமனசிலில்
ஸ்ரூஜாவாநு	பக்தியோடுகூடியவனை
உாம ஹஜித	} என்னை பஜிக்கிறானே
ஸம் யாகுதஉம் (ஐதி)	} அவன்சிரேஷ்டமானயோகியாக
மெ மதம்	} எனக்கு சம்மதனையிருக்கிறான்.

சகலவிதயோகிகளுக்குள்ளே, எவன் என்னிடத்தில் நிறுத்தப் பட்ட மனதிலில் பக்தியோடு என்னைப் பஜிக்கிறானே, அவன் சிரேஷ்டமானயோகி என்று எனக்கு சம்மதனையிருக்கிறான்.

(ஈா) உூதெதநாஹூாதுநா = எனக்குப்பிரியமுள்ளசெய்கிறதைத் தவிர மற்றசகலவியாபாரங்களையும் விட்டிருக்கிறமனதிலுலே, என் ஸ்ரூல், பாகியாந்தர (வெளியுள்) விருத்தியிரண்டிலும் என்னையே யதிகப் பிரியமான வஸ்துவென்று அதித்து என்னைவிட்டொரு சுகனங் கூடப் பிரியாமலும், என்னைவிட்டுப் பிரிந்திருந்தால் கரித்துப்போ வோமென்கிற எண்ணங்கொண்டதாயு மிருக்கிற மனசிலுலே, ஸ்ரூஜா வாநு = என்னைச் சீக்கிரமாக வடையவேண்டுமென்பதில் அதிக பரபரப்போடு கூடியிருக்கிறான். ஆகையால்தான் இவன் மேலாகச் சொல்லிவந்த நான்குவித யோகிகளைக்காட்டிலும் சிரேஷ்டன்.

(ஊா) "யொகிநாஉவிஸவெ-ுஷாம=யோகிகளுக்குள்ளே" சிரேஷ்டனுக விவனைச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட யோகிகளுக்குள்ளே சிரேஷ்டனென்கிற கேள்வியுண்டாகிறது. இதுவிஷயமாய் (ஸ்ரீ) வியக்தமாய்ச்சொல்லாவிட்டாலும் இதின் சு-வது அத்உரு-முதல் ஈ0-வரையிலுள்ள சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிற, யக்கியமென்கிற பெயரிலுல் அழைக்கப்படும் பதினேருவகை கருமங்களைச்செய்யும் கருமயோகிகளுக்குள்ளே சிரேஷ்டராய் ஈசுவரபக்தி செய்து ஈசுவரனையே பஜிக்கிற தியானயோகி சிரேஷ்டனென்று அபிப்பிராயப் பட்டதாகக் காணுகிறது. (ஈா) இந்த வத்தியாயம். உசு-வது சுலோகத்தில் குறித்தயோகியைவிட, ஈ0-வது சுலோகத்தில் குறித்த யோகி சிரேஷ்டன். இவனைவிட, ஈக - வது சுலோ

கத்தில் குறித்தயோகி சிரேஷ்டன். இவனைவிட, கூஉ-வது சுலோ கத்தில் குறித்தயோகி சிரேஷ்டனென்று அந்தந்த சுலோகத்தின் அவதாரிகையில் சொல்லியிருப்பது மல்லாமல், அந்த நால்வகை யோகிகளைக் காட்டிலும், இவன் சிரேஷ்டனென்று இதிலும் சொல் லியிருக்கிறார். (தீ,வி) ஞானயோகி, பக்தியோகி, இவர்களுக்குள் ளே பக்தியோகி சிரேஷ்டன். எனென்றால், பக்தியோடு பகவானை சேவிக்கிறவனுக்குஎளிதான். என்று சொல்லி யிருக்கிறார். (ஸ்ரீ) சில யோகிகள், யோகசமாதியில், தியானத்திற்கு விஷயமாக, ருத்தி ரன், இந்திரன், சூரியன், சுப்பிரமணியன், கணபதி, முதலிய தேவ தைகளில் ஒன்றைக் குறித்துத்தியானஞ்செய்கிறார்கள். சிலயோகிகள், தியானத்திற்கு விஷயமாக பரமாத்மாவையே குறித்துக்கொண்டு அதிக பக்தி விசுவாசத்துடன் தியானஞ் செய்கிறார்கள். இவர்களுக் குள்ளே, பரமாத்மாவையறிந்த யோகியே சிரேஷ்டன் என்று சொல்லுகிறார். இந்த அர்த்தத்தை நினைத்து ஏழாவது அத்தி யாயம், உகூ-வது சுலோகமாகிய "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீ தேகமேவாத்விதீயம் தத்தை கஸ்மின்னஸதோ மனஸ்யாத்ஸர்வாணி பூதானி மனோமயானி" இதுமுதலிய வாக்கியங்கள் ஆதரிக்கின்றன. (சஎ)

ஸ்ரீமத் ராமானுஜ மஹாதேசிக ஸ்வாமினே நமஹ.

ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ.

ஸ்ரீ வேதவ்யாஸ ஸ்வாமினே நமஹ.

ஸ்ரீ ஸர்வ ஸ்வாமினே நமஹ.

ஆண்டாளைப் போலாகுமாறு ஆரூரனது அத்தியாயம்

முற்றிற்று.

ஸ்ரீ ஈஷ.

ஷ ஷ் ஷெ ஈ ஷ ஷ்ரு ஈ ய ஃ.

ஏழாவது அத்தியாயம்.

ஸ்ரீ ஹமவா ந-வாச.

க. மயாஸக்தமநாஃபார்த யோகம்யஞ்ஜந்மதாஸ்ரயஃ
அஸம்ஸயம்ஸமக்ரம்மாம் யதாஜ்ஞாஸ்யஸிதச்ருணு॥

ஹமவா ந-வாச	கிருஷ்ணசுவாமிசொல்வது
ஹேபார்த	ஓ! குந்திபுத்திரா!
மயி	(பரமாத்மாவாகிய) என்னிடத்தில்
ஸக்தமநாஃ	பற்றுள்ளமனைதயுடையவனையும்
யோகம்	யோகத்தை
யஞ்ஜந்து	செய்கிறவனையும்
மதாஸ்ரயஃ	என்னையேசரணகதியடைந்தவனையும்
(ஸந்து)	இருந்துகொண்டு
ஸமக்ர*	பூர்ணமாயிருக்கிற
மாம்	என்னை
யதா	எவ்விதமாய்
அஸம்ஸயம்	சமுசயமில்லாமல்
ஜ்ஞாஸ்யஸி	அறிவாயோ
தச்ருணு	அதை
ஸ்ருணு	கேள்.

கிருஷ்ணசுவாமி சொல்வது, ஓ! பார்த்தா! என்னிடத்தில் மனதைவைத்து, யோகத்தைச் செய்கிறவனையும், என்னையே சரணமடைந்தவனையு மிருந்துகொண்டு, பூர்ணனையிருக்கிற என்னை யெவ்விதமாய் சமுசயமன்றி யறிவாயோ அதைக் (சொல்லுகிறேன்) கேள்.

(ஸ்ரீ) இதுவரையில் ஆத்ம தத்துவத்தைச்சொல்லி இனியுபாசிக்க யோக்கியமான ரூபத்தைச் சொல்லப்போகிறார்.

(ஈர) முதலாறு அத்தியாயங்களால், பரமாத்மாவாகிய நாராயணனை யடைவதற்குக் காரணமாகிய உபாசனையைச் சொல்லுவதின் பொருட்டு, தன்னுடைய (ஜீவனுடைய) ஆத்ம சுவரூப நிச்

---

* (ஸம) (ஸ்ரீ) சகல விபூதி, பலம், சக்தி, ஐசுவரியம் முதலிய குணசம்பன்னராயிருக்கிற.

சயத்துடன் கூடிய கருமாநுஷ்டானஞ் சொல்லப்பட்டது. இதுமுதல், ஆறு அத்தியாயங்களால், பரமாத்ம சுவரூபமும், பரமாத்மாவை யடைகிறதற்குக் காரணமாகிய உபாசனையென்று சொல்லப்படுகிற பக்தியும், சொல்லப்படும்.

இந்த ஏழாவதத்தியாயத்தில், பரமாத்ம சுவரூப நிச்சயமும், பிரகிருதியிலுல் பரமாத்ம சுவரூபமானது ஜீவனுக்கு மறைபட்டிருக்கிற விதமும், பிரகிருதியைப் போக்கடித்துக் கொள்ளுவதற்குச் செய்யவேண்டிய சரணுகதியின் விவரமும், சரணுகதி செய்யப்பட்டவர்களுக்குள் பேதமும், ஞானம் சிரேஷ்டமென்பதும் சொல்லப்படுகின்றன.

இந்த சுலோகத்தி னர்த்தமாவது-மயாஸக்தமநாஃ=என்னை யெதிர்பார்த்தும், என்னிடத்தில் பிரியம்வைத்தும், என்னுடைய சுவரூபம், குணம், செய்கை, மகிமை, இவைகளி லெப்பவும் பற்றியுமிருக்கிற மனசையுடையவனையும், மதாஶ்ரயஃ=என்னையே ஆதாரமாயுடையவனையும், யோகம் = என்விஷயமான யோகத்தை, யுஞ்ஜன்= ஆரம்பஞ் செய்கிறவனையுமிருக்கிற நீ, அஸம்ஶயம் = சந்தேகமில்லாமல், ஸமக்ரம் = பூர்ணமாயிருக்கிற, மாம் = என்னை, யதா = எப்படி, ஜ்ஞாஸ்யஸி=அறிவையோ, தச்ச்ருணு=அதைக்கேள்.

(உ) (தீ,வி) மயாஸக்தமநாஃ=என்னிடத்தில் பிரீதிவைத்த மனதை யுடையவும், மதாஶ்ரயஃ=''பகவானே என்னைக்கொண்டு சகலத்தையும் செய்விக்கிறார். எனக்கு அவரே சரணமடையத்தகுந்தவர். சகலத்திற்கும் கருத்தா அவரே'' என்கிற நிச்சய முடையவும், யோகம்யுஞ்ஜன்=யோகத்தில் பிரவேசிக்கிறவனும் (மற்றதில் வித்தியாச மில்லை.) (க)

உ. ஜ்ஞாநமேதேঽஹமவிஜ்ஞாநமிதம்வக்ஷ்யாம்யஶேஷதஃ।
யஜ்ஜ்ஞாத்வேஹநாந்யஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே॥

யத்	எதை
ஜ்ஞாத்வா	அறிந்து
இஹ*	இதில்(மோக்ஷமார்க்கத்தில்)
அந்யத்	மறுபடியும்
அந்யத்	வேறொன்று
ஜ்ஞாதவ்யம்	தெரியவேண்டியதாய்
நாவஶிஷ்யதே	மிச்சமிருக்கமாட்டாதோ

---

* (ஈ) மயி = என்னிடத்தில்.

ஸவிஜ்ஞாநம்*	அநுபவஞானத்தோடுகூடின
ஜ்ஞாநம் †	இந்தஞானத்தை
கு ஸ்ரீஷ்யதம்	குறைவன்றியில்
கு அஹம்	நான்
தெ	உனக்கு
வக்ஷ்யாமி	சொல்லுகிறேன்.

எதையறிந்து, மோக்ஷமார்க்கத்தில் மறுபடி வேறொன்று தெரியவேண்டியதாய் மிச்சமிருக்கமாட்டாதோ, அநுபவஞானத்தோடு கூடின அந்த ஞானத்தைக் குறைவன்றி நானுனக்குச் சொல்லுகிறேன்.. (உ)

க. மநுஷ்யாணாம்ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததிஸித்தயே।
யததாமபிவிஸிஜ்ஞாநாம் கஶ்சிந்மாம்வேத்தி தத்த்வதம்॥

மநுஷ்யாணாம்‡	மனிதர்களுடைய (மனிதர்களுக்குள்ளே)
ஸஹஸ்ரேஷு§	ஆயிரங்களில் (ஆயிரத்தில்)
கஶ்சித்	ஒருவன்
ஸித்தயே	ஞானமடையும்பொருட்டு
யததி	முயற்சிசெய்கிறான்
யததாமபி	முயற்சிசெய்கிற
ஸிஜ்ஞாநாம்	ஞானிகளுடைய (ஞானிகளுக்குள்ளே)
(ஸஹஸ்ரேஷு)	ஆயிரங்களில் (ஆயிரத்தில்)
கஶ்சித்	ஒருவன்
மாம்	என்னை
தத்த்வதஃ	உண்மையாய்
வெத்தி	அறிகிறான்.

அநேக மனிதர்களில் ஒருவன், ஞானமடையும் பொருட்டு, முயற்சி செய்கிறான். முயற்சிசெய்கிற அநேக ஞானிகளுக்குள்ளே ஒருவனென்னை யுண்மையா யறிகிறான். (ஈ)

---

* (ஈ) ஜீவஜடங்களுக்கு விலக்ஷணமான பகவானுடைய மகிமைகளையும், குணதிசயங்களையும் அறிகிற ஞானத்தோடு கூடின. (உ) (மீ,வி) பகவானுடைய விசேஷமாகாத்மியஞானத்தோடு கூடின.

† (ஈ) பகவத் ஸ்வரூபஞானம். (உ) என் விஷயமான ஞானம். (மீ,வி) சாமான்னிய மாகாத்மியஞானம்.

‡ - § (ஈ) சாஸ்திராதிகாரிகளான ஆயிரம் பெயர்களில்.

சு. ஹஞ்தீராவொநமொவாயஂ வம்ஶநாஷஂகிலவ।
சுஹஜ்ஞாஸுதீயம்ஶே ஹிந்தாவுகூதிராஷ்டயா॥

ஶே	என்னுடைய
உயம்	(சக்தியான) இந்தமாயைதானே
வுகூதிலவ	
ஹஞ்தீம்*	பூமி
சுவம்†	ஜலம்
சுநலம்‡	அக்கிநி
வாயஂம்§	காற்று
வம்¶	ஆகாசம்
உநம்॥	மனசு
ஷஂகீம்+	புத்தி
சுஹம்காராம்÷	அகங்காரம்
உதி	இப்படி யெட்டுவிதமாய்
சுஷ்டயா ×	
ஹிந்தா	பிரிந்திருக்கிறது.

---

* ¶ (ஸ்ரீ) பூமி, ஜலம், அக்கிநி, காற்று ஆகாயம், இந்த பூதங்களுடைய சூட்சுமமாகிய தன்மாத்திரைகள், அல்லது ஸ்தூலசூட்சும பூதங்கள். (ஸ) பூத தன்மாத்திரைகள். ஸ்தூலமல்ல.

|| (ஸ) (ஸ்ரீ) மனதுக்குக்காரணமான அகங்காரதத்துவம். (ஸ்ரீ) அல்லது பிரதானம். (ர) மனசு முதலிய இந்திரியங்கள்.

+ (ஸ) அகங்கார தத்துவத்திற்குக் காரணமான மகத்தத்துவம். (ஸ்ரீ) (ர) மகத்தத்துவம்.

÷ (ஸ) அவித்தையுடன் கூடிய அவ்வியக்தம். (ஸ்ரீ) அவித்தை அல்லது அகங்காரமும், இந்திரியங்களும். (இ) (ஸ்ரீ,வி) அகங்கார தத்துவமும், மகத்தத்துவமும். அகங்காரதத்துவத்தில் மகத்தத்துவம் அடங்கியேயிருப்பதினால், மகத்தத்துவம் பிரத்தியேகமாய்ச் சொல்லப்படவில்லை.

× (வ்வா) இதில் பிரகிருதி (தத்துவம்) எட்டுவிதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சில புராணங்களில், தத்துவங்கள் கள - என்றும், உந - என்றும், உச - என்றும், நசு - என்றும், சுசு-என்றும் இப்படிப் பலவிதங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், அப்படிச்சொன்னது பிசகானதென்றெண்ண விடமில்லை. ஏனென்றால், இந்தச்சுலோகத்தின் அர்த்தத்திலேயே (ஸ்ரீ) சொல்லியிருக்கிறபடிக்கு இதின் கந - வது அத்தியாயம், சு-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற, உச-தத்துவங்களைச் சுருக்கி இதில் எட்டாகச் சொல்லப்பட்டதுபோல், சுருக்கியும், விவரித்தும் சொல்வதினால், புராணங்களில் அப்படி வித்தியாசம்தோற்றப்படுகிறது. இந்த பூததத்துவங்களினுற்பத்திக்கிரமத்தைக்குறித்து, விஷ்ணுபுராணம் முதலா

என்னுடைய பிரகிருதியே, பூமி, ஜலம், அக்கிநி, காற்று, ஆகாசம், மனசு, புத்தி, அகங்காரம், இப்படி எட்டுவிதமாய்ப் பிரிந்திருக்கிறது. (ச)

நு. சுவரூயகி தவுநூம் பூகூ தாம்விதிஜெவாரூம்,
ஜீவஹ-ஏ தாம்ஹாவோஹோ யமெஜ்யாரூ தஜமசூ॥

ஹெஹோவோஹோ ஓ! புஜபலமுள்ளவனே!

உயா { இது (மேற்குறித்த எட்டுவிதமான பிரகிருதி)

சுவரூ நிகிருஷ்டமானது (தாழ்ந்தது)

வது அம்சம், உ - வது அத்தியாயத்திலும், பாகவதம் உ - வது ஸ்கந்தம் நு - வது அத்தியாயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதானது, சுருக்கமாய் அடியில் விவரிக்கப்படுகிறது. அவ்வியக்தம், பிரதானம், மூலப்பிரகிருதி என்கிற பெயர்களாற் சொல்லப்படுவதாகிய மாயையிலிருந்து, சத்துவ, ரஜஸ், தமஸ்களாகியவை ஷம்மிய ரூபமான மகத்தத்துவமுண்டாச்சுது. அந்த மகத்தத்துவத்திலிருந்து, வைகாரிகம், தைஜஸம், பூதாதி என்ற மூன்று விதமான அகங்காரதத்துவம் பிறந்தது. வைகாரிக அகங்காரமானது சாத்துவீகமென்றும், தைஜஸ அகங்காரமானது இராஜஸமென்றும், பூதாதி அகங்காரமானது தாமஸமென்றும் சொல்லப்படுகின்றன. பூதாதியென்றுசொல்லப்படுகிற தாமஸாகங்காரம் விகாரப்பட்டு சப்ததன்மாத்திரையை யுண்டாக்கிற்று. அந்தச் சப்ததன்மாத்திரையிலிருந்து ஆகாசமுண்டாயிற்று. அந்த ஆகாசத்திற்குச் சப்தமே குணமாகவாச்சுது. அந்த ஆகாசம் விகாரப்பட்டு ஸ்பரிசதன்மாத்திரையையுண்டாக்கிற்று. அந்த ஸ்பரிசத்திலிருந்து வாயுவுண்டாயிற்று. அந்தவாயுவுக்கு சப்தம், ஸ்பரிசமிரண்டும் குணங்களாயின. அந்தவாயு விகாரப்பட்டு ரூபதன்மாத்திரையை யுண்டாக்கிற்று. ரூபத்திலிருந்து, தேஜஸ் (அக்கிநி) உண்டாயிற்று. தேஜஸுக்கு, ரூபம், ஸ்பரிசம், சப்தம், இம்மூன்றும் குணங்களாயின. தேஜஸ் விகாரப்பட்டு, இரஸதன்மாத்திரையை யுண்டாக்கிற்று. இந்த இரஸத்திலிருந்து அப்பு (ஜலம்) உண்டாயிற்று. அந்த அப்புவுக்கு இரஸம், ரூபம், ஸ்பரிசம், சப்தம், இந்தான்கும் குணங்களாயின. அந்த அப்பு விகாரப்பட்டு, கந்ததன்மாத்திரையை யுண்டாக்கிற்று. அந்தக் கெந்தத்திலிருந்து பிருதிவி (பூமி) உண்டாயிற்று. பிருதிவிக்கு, கந்தம், இரஸம், ரூபம், ஸ்பரிசம், சப்தம் இவ்வைந்தும் குணங்களாயின. ஆனல், ஆகாசத்திற்கு சப்தமும், வாயுவுக்கு ஸ்பரிசமும், தேஜஸுக்கு ரூபமும், அப்புவுக்கு இரஸமும், பிருதிவிக்கு கந்தமும் பிரதானகுணமாம். சப்தாதி தன்மாத்திரைகள் அந்தந்தபூதங்களின் சூக்ஷமமென்று சொல்லப்படும்.

மேற்சொன்ன வைகாரிகமென்கிற சாத்துவீகாகங்காரத்திலிருந்து, மனதும், அதின் அபிமான தேவதையான சந்திரனுமுண்டானார்கள், அப்படியே திக்குகள், வாயு, சூரியன், வருணன், அசுவனிதேவதைகள், அக்கிநி, இந்திரன், உபேந்திரன், மித்திரன், பிரஜாபதி, இந்தப் பத்து அபிமானதேவதைக ளுண்டானார்கள்.

தைஜஸமென்கிற இராஜஸாகங்காரத்திலிருந்து ஞானேந்திரியங்கள் ஐந்தும், கருமேந்திரியங்கள் ஐந்து மூண்டாயின. மேற்கண்ட பத்துதேவதைகளும் பத்து இந்திரியங்களுக்கு அபிமானதேவதைகளானார்கள். அப்படியே ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸாகங்காரத்திலிருந்துண்டாயின.

உதஸ்ரு	இதைப்பார்க்கிலும்
சுநரூம	வேறுனதும்
யயா	எந்தப்பிரகிருதியிலுலே
ஜூம்	இந்தப்பிரபஞ்சமானது
ஜமசு	
யாயஷுதெ	தரிக்க அல்லது தாங்கப்பட்டிருக்கிறதோ
தாம்	அப்படிப்பட்டதும்
ஜீவஹுதாம்	ஜீவசுவரூபமானதும்
ஜெ	என்னுடைய ஆத்மசுவரூபமான அல்லது என்னுடைய ஆதீனமானது மான
ஷுகூதிம்	பிரகிருதியை
வாரம்	சிரேஷ்டமென்று
விஜி	அறி.

ஓ! புஜபலமுடையவனே, (அர்சுன) மேற்குறித்த எட்டுவிதமான பிரகிருதி, நிகிருஷ்டமானது. இதைப்பார்க்கிலும் வேறுனதும், எந்தப் பிரகிருதியிலுலே இந்தப்பிரபஞ்சமானது தரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படிப்பட்டதும், ஜீவசுவரூபமானதும் (பிராணனைத் தரிக்கிறதற்கு எதுவானதும்) என்னுடைய சுவரூபமான (அம்சபூதமான) துமான அந்தப்பிரகிருதியை சிரேஷ்டமென்று அறி.*

(ஸம்) (ரா) என்னுடைய ஜடப்பிரகிருதியை என்னுடையசேதன பிரகிருதியானது தரித்துக்கொண்டிருக்கிறது.

(உ) (பீ.வி) சேதனபிரகிருதியான இலக்ஷ்மியிலுலே ஜடப்பிரகிருதியான இந்தப் பிரபஞ்சமானது தரிக்கப்பட்டிருக்கிறது. பிராணன்களை தரிக்கிறதிலுலும், எப்போதும், எவ்விடத்திலும் வியாபித்திருப்பதிலுலும், இந்த இலக்ஷ்மி ஜீவபூதமென்று சொல்லப்பட்டது. (நு)

சுர. வததஜ்ஞாநீநிஹுதாநி லவஷுாணீதவுவயாரூய।
சுஹுங்கூதுஹ்ஸுஜமதம் வுஹவம்வு ஜயஹ்ஸுயா॥

லவஷுாணி	சகலமான
ஹுதாநி	பூதங்களை
வததஜ்ஞாநீநி	இவ் விருவகையான பிரகிருதியிலுண்டானவைகளாக
ஜதி	தெரிந்துகொள்
உவயாரூய	அவைகளின்மூலமாய்
தயா	

---

* (ஷ்ரா) அத் - சு, சு - சு, அத் - கஙு, சு - சு, பார்க்க.

கூதஸ்வ
ஜகத்
} சகலமானஜகத்திற்கு

வரவம் உற்பத்திகாரணமும்
வரயம் லயத்திற்குக்காரணமும்
சஹம் நானே.

சகல பூதங்களையும், இந்த (ஜட, சேதன) இருவகை பிரகிருதியிலேயுண்டானவைகளாகத் தெரிந்துகொள். அவைகளின்மூலமாய் சகல ஜகத்திற்கும், உற்பத்திலயங்களுக்குக்காரணம், நானே.*

எ. மத்தஃபரதரம்நாந்யத் கிஞ்சிதஸ்தி தநம்ஜய।
மயிஸர்வமிதம்ப்ரோதம் ஸூத்ரேமணிகணாஇவ॥

மத்த நம்ஜய ஓ! தனத்தைஜயித்தவனே!
மத்தஃ என்னைப்பார்க்கிலும்
பரதரம் மகாசிரேஷ்டமானது
அந்யத் வேறே
கிஞ்சித் ஒன்றும்
நாஸ்தி கிடையாது
ஸூத்ரே நூற்சரட்டில்
மணிகணாஇவ மணிகளைப்போல
மயி என்னிடத்தில்
இதம் இந்தச் சகலப்பிரபஞ்சமும்
ஸர்வம் }
ப்ரோதம் கோர்க்கப்பட்டிருக்கிறது. (ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது.)

ஓ! அர்சுன! என்னைவிட சிரேஷ்டமானது, வேறே யாதொன்றுங்கிடையாது. ஆனால், காணப்படுகிற பிரபஞ்சமெல்லாம், நூலில் மணிகள் கோர்க்கப்பட்டிருப்பவைபோல, என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

(ரூ) "மகாசிரேஷ்டமானது" எப்படியென்றால், பரமாத்மா ஜட சேதனங்களுக்கு † சேஷியாயும், அவைகளுக்குக் காரணமாயு

---

* (ஷ்ரீ) அத் - கஉ, சு - உள பார்க்க.

† (ஷ்ரீ) சேஷி, என்பது எப்படியென்றால், ஜீவன்சேஷி. அவனுக்குத் தேகேந்திரியங்களும், சப்தாதிவிஷயங்களும், மற்றுமுள்ளவஸ்துக்களும், போக்கியவஸ்துக்களாயிருப்பதால், இவைகள் சேஷம். இப்படிப்போலவே, பரமாத்மாசேஷி. ஜீவனும், மற்ற சகல அசேதனப்பிரபஞ்சமும், பரமாத்மாவுக்கு போக்கியமானதால், அந்தச் சேதனசேதனங்கள் சேஷம்.

மிருப்பதிணலேயும், ஞானம், சக்தி, பலம், முதலியகுணங்களுடன் கூடியிருப்பதிணலேயும், நிரோஷ்டமாகச்சொல்லப்பட்டது. "நூலில் மணிகள்போல், என்னிடத்தில், சகல பிரபஞ்சமும், கோர்க்கப் பட்டிருக்கிறது" எப்படியென்றால், காரியகாரண அவஸ்தைகளோ டுகூடியிருக்கிற, இந்த ஜடசேதன ரூபமான, சகலபிரபஞ்சமும், எனக்கு சரீரம், சகலத்திற்கும் ஆத்மாவான (சரீரியான) என்னிட த்தில், சகலபிரபஞ்ச மும் ஆதாரித்திருக்கிறதென்பது தாத்பரியம். இந்த அர்த்தமானது, "யஸ்யபிருதிவீசரீரம் । யஸ்ருத்தாசரீரம் । வஷவஸ்ஹுஸ்ருதாசரீரா । அக்ஷரசரீரோஹிரண்யவர்ணோஹரிஸ்ருக்" நாராயணஉபநி" இந்த சுருதிவாக்கியங்களினாலும் சொல்லப்பட் டிருக்கிறது. (எ)

அ. ரவொஹரேஷ-காளவிஜய ஏ தாளவிரமயிவை-குயஃபியோர்,
ஏ ஹ ஏ
ஏ ணவொவவை-ரவெவ்ஷ-ஏ மஜைம்பிலைளாஃ-ஷ-ஏ நூஷ-ா॥
ஹ ஏ

ஹெகளம்-கிய	ஓ! குந்திபுத்திரா!
கூவை-ா ஹ	ஜலங்களில்
ரவம்	ரூபியம்
மமிவை-குயஃபியோர்	சந்திரசூரியர்களிடத்தில்
ஏ ஹா	சகல தேஜஸ்களும் ஒளியும்
வவை-ஃவெவ்ஷ-ஏ	சகல வேதங்களுக்கும்
ஏணவம்	பிரணவமென்கிற ஓங்காரமும்
ஹெ	ஆகாசத்தில்
மஜைம் ஃ	சப்தமும்
நூஷ-ா	மனிதர்களிடத்தில்
ளாஃ-ஷ-ம்	மானிடத்தன்மை அல்லது புருஷ சுபாவமும்
கூஹம்	காண்கிறேன்.
கூவை ஃ	

ஓ! குந்திபுத்திரா! ஜலங்களில் ருசியும், சந்திர சூரியர்களிட த்தில் ஒளியும், சகலவேதங்களில் பிரணவமும், ஆகாசத்தில் சப்த மும், மனிதர்களிடத்தில் மானிடத்தன்மையும் காணை.

(ஸா) இதுமுதல் கடவது வரையிலுள்ள சுலோகங்களுக்கு வியாக்கியானம், கடவது சுலோகத்தின் மேலில் காண்க. (அ)

க. ஏஹிணஸுராமயஃவைபுயிவஸுராஸு ஸிதஜுஸாஸிவிஹாவவஸள।
ஜீவநஸுவைஷுஸுரை-குஸிதஷ-ா தவைஸுராஸ்ஸு தவைஹிஷ-ா॥
ஜ

ப்ருதிவ்யாம்	பூமியில்
சைவ	நல்லவாசனையும்
தேஜஶ்ச	
விபாவஸௌ	அக்கினியிடத்தில்
தேஜஸ்	பிரகாசமும்
தஸ்மி	(நானே) இருக்கிறேன்
ஸர்வபூதேஷு	சகலபிராணிகளிடத்திலேயும்
ஜீவநம்	ஆயிசு அல்லது பிராணனைதரிப்பதும்
தபஸ்விஷு	தபசுசெய்கிறவர்களிடத்தில்
தபஶ்ச	தபசும்
அஸ்மி	(நானே) இருக்கிறேன்.

பூமியில் நல்லவாசனையும், அக்கினியின் பிரகாசமும், பிராணிகளின் ஆயிசும், தபசு செய்கிறவர்களின் தபசும், நானே. (கூ)

கூ0. பீஜம்மாம்வித்திதாம் வித்திவாய்த்வநாதநம்।
புத்திர்புத்திமதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம்॥

ஹேபார்த்த	ஓ! குந்திபுத்திரா!
மாம்	நித்தியனை
பீஜம்	என்னை
வித்தி	சகலபூதங்களுக்கும்
சனாதனம்	விற்முக
புத்திர்	அறி
புத்திமதாம்	புத்திசாலிகளுடைய
அஹம்	நிச்சயஞானமும்
தேஜஸ்விநாம்	தேஜஸ்விகளுடைய
தேஜஸ்	தேஜஸும்
அஸ்மி	நானேயிருக்கிறேன்.

ஓ! குந்திபுத்திரா! நித்தியனை என்னை சகல பூதங்களுக்கும் விதையாகவறி. புத்திசாலிகளுடைய நிச்சய ஞானமும், தேஜஸ்விகளுடைய தேஜஸும் நானே. (க0)

கக. பலம்பலவதாம்சாஹம் காமராகவிவர்ஜிதம்।
தர்மாவிருத்தோபூதேஷு காமோஸ்மிபரதர்ஷபா॥

---

* (ஸ்ரீ) ப்ராஹ்மீ = மஞ்ஞைதரியம்.

ஹெஹாபதஷ்டஹ	ஓ! பரதகுல சிரேஷ்டனே!
பலவதாம்	பெலவான்களுடைய
காமராகவிவர்ஜிதம்	பிரியமும், அபேக்ஷையுமற்ற
பலம்	பெலமும் (தேகவலிமை)
பூதேஷு	பிராணிகளுடைய
யஸ்தாவிரோதோ	தருமத்திற்குவிரோதமில்லாத
காமோ	ஆசையும்
அஸ்மி	நானிருக்கிறேன்.
பரதர்ஷபே	

ஓ! பரதகுல சிரேஷ்டனே! பெலவான்களுடைய, பிரியமும் அபேக்ஷையு மற்ற தேகபெலமும், பிராணிகளுடைய, தருமத்திற்கு விரோதமில்லாத ஆசையும், நானே.

(இந்த அத்தியாயம், அ-வது சுலோகம் முதல், இந்த-கக-வது சுலோகம் வரையிலுள்ள, சுலோகங்களில், சொல்லப்பட்டிருக்கிற "ஜலத்திலுள்ள இரஸம்" முதல், "தருமத்திற்கு விரோதமில்லாத ஆசை" என்பது வரையிலுள்ள, இரஸம் முதலியவைகள், நானேயென்று பகவான் சொன்னதின் தாத்பரியமும், சில பதங்களுக்குத் தாத்பரியமும், பாஷியக்காரர்களும், வியாக்கியாதாக்களும், சொல்லியிருக்கிறபடி, அடியில் விவரிக்கப்படுகிறது.)

(ரூ) எ-வது, சுலோகத்தில், நூலில் மணிபோல, பிரபஞ்சம், என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டதல்லவா? அதெப்படியென்பது அ-முதல் கக-வரையிலுள்ள சுலோகங்களில் விவரிக்கப்படுகிறது. ஜலத்தில் இரஸாம்ச மெதுவோ, அது என்னுடைய சுவரூபம். அந்தரஸமான என்னுடைய சுவரூபமாகிற நூலில் மணியாகிற ஜலமானது, கோர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இரஸமே நானென்று சொல்லப்பட்டது. மற்ற சந்திர சூரியர் முதலிய விஷயங்களிலும், இதுபோலவே அர்த்தங்கிரகிக்க வேண்டியது.

"வேணைவாமம்யஃ" = நற்கெந்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது. துர்கெந்தத்தில் ஈசுவராம்சமில்லையோ வென்றால், இல்லை யென்று சொல்லும்பொருட்டு, இவ்விடத்தில், "புண்ணியகெந்தம்" என்று சொன்னதாக தாத்பரியமல்ல. பூமியிலும், மற்ற வஸ்துக்களிலு முள்ளவைகளெல்லாம் நற்கெந்தமே. ஆனால், மற்றதத்துவங்களுடைய சேர்க்கையினால், நற்கெந்தம், துர்கெந்தமாகிறதே யன்றி யில், சுவபாவமல்ல. அதெப்படியென்றால், சுத்தமும், ஞானப்பிரகாசமுமுள்ள ஜீவசுவரூபமானது, அவித்தையினுடைய சம்பந்தத்தால், அசுத்தத்தையும், அக்கியானத்தையு மடைந்திருப்பதுபோல.

காமம் = அடையப்படாத வஸ்துக்களை யடையவேண்டுமென்கிற விருப்பம். ராகம் = தானபேக்ஷித்து, அதிலில் கிடைத்த வஸ்துக்களிடத்தில் பிரியம். த்வேஷாத்காமாத் = தேகசம்ரக்ஷணத்திற்காகவே அந்தபாணதிகளிலிச்சை.

(ஸ்ரீ) இரஸத்தின் சூக்ஷ்மபாகம் என்னுடைய அம்சம். அந்த அம்சமானது, விபூதி யென்றுஞ் சொல்லப்படும். அந்த என்னுடைய அம்சமாகிய இரஸத்திற்கு, நானிருப்பிடமாகையால், "ஜலத்திலுள்ள இரஸம் நான்" என்று சொல்லப்பட்டது. மற்றவைகளுமிதேயர்த்தத்தில் கிரகிக்கப்படவேண்டும். ராகம் = கிடைத்தது போதாது; பின்னும் வேண்டுமென்கிற அபேக்ஷை. (வைராக்யவதாக்ஷி, என்று இவர்பாடம்,) த்வேஷாத் - காமாத் = சுவஸ்திரி விஷயத்திலுண்டாகும் காமவிஷயத்திலுங் கூட, தருமத்திற்கு விரோதமாயிருக்கக்கூடாது.

(ரா) இரஸமுதலியவைகள் என்னைவிட வேறானதாகிலும் அவைகள் என்னாலுண்டாக்கப்பட்டவைகள். என்னாலுண்டானவைகளாயும், என்னை ஆசிரயித்தவைகளாயும், என்னுடைய சரீரமாயும், என்னுடைய சேஷபூதமாயும், நான், அவைகளுக்குச் சேஷியாயுமிருப்பதால், அவைகள் நானென்று சொல்லப்பட்டன. மற்றவைகளுமிப்படியே கிரகிக்கத் தக்கவைகள்.

(உ) சகல வஸ்துக்களும் ஈசுவராதீனமாயும், ஈசுவரனை ஆதாரமாயுடையனவாயுமிருப்பதால், எந்தவஸ்து எவனுடைய அதீனமாயிருக்கிறதோ, அந்தவஸ்து, அவனுகவே சொல்லப்படுகிறது. ஆகையால், தன்னுடைய அதீனமான இரஸம் முதலியவைகள், தானே யென்று பகவான் சொன்னார்.

ஜலம் முதலியவைகளில், இரஸம் முதலியவைகள் எப்படிசிரேஷ்டமோ, அப்படியே, நான் எல்லாவிடத்திலும் சிரேஷ்டனை விருக்கிறேன்.

(ஸ்ரீ,வி) ஜலத்திலுள்ள இரசம் முதலானவைகளை, அதிலிருக்கும்பரமாத்மாவுக்குப் பிரதிமையாகப் பாவித்து, உபாசிக்கிற ஞானிகளுண்டு. ஆகையால், இரஸ முதலியவை நானே என்று பகவான் அபேதமாகச் சொன்னார்.

"நாஸ்ரோஹிததௌவாஸ்ரோஹி" முதலிய சுருதிவாக்கியங்களில், உபாஸனஸ்தலங்களில், பிரதிமையான நாமங்களையும், உபாசிக்கப்பட்ட பிரம்மத்தையும் அபேதமாய்ச் சொல்லியிருப்பதுபோல இவ்விடத்திலும், அபேதமாய்ச்சொன்னதாக வறியவேண்டியது. அல்லது, ஜல முதலானவைகளின் அபிமான தேவதைகளிடத்திலுள்

ள பரமாத்ம சுவரூபத்தை உபாசனை செய்யும்பொருட்டு, அபேத மாய்ச் சொன்னதாகவாவது கிரகிக்கவேண்டியது. (கக)

கஉ. யெவெவஸாகுகிகாஹாவா ராஜஸாஸ்தாஸஸாஶ்சயெ।
உத்தவனவெதிதாநுவிஜி நகுஹம்தெஷுதெதயி॥

ஸாகுகிகாவனவ*	சத்துவகுணத்திலேயேயுண்டான
ஹாவாஃ	வஸ்துக்கள்
யெ	எவையோ
ராஜஸாஶ்ச†	இரஜோகுணத்திலுண்டானவும்
தாஸஸாஶ்ச‡	தமோகுணத்திலுண்டானவும்
(ஹாவாஃ)	வஸ்துக்கள்
யெ	எவையோ
தாநு	அவைகளை
உத்தவனவெதி	என்னிலேயேயுண்டானவையென்று
விஜி	அறி
தெஷுந§	அவைகளில்
நாஹம்¶	நான்
ந‖	இல்லை
தெ+	அவைகள்
மயி÷	என்னிடத்தில்
(வர்த்தே)	இருக்கின்றன.

சத்துவ, ரஜஸ் தமோகுணங்களினாலுண்டான வஸ்துக்களெவையோ, அவைகளென்னிலேயேயுண்டானவை யென்றும், நான் அவைகளில்லை என்னிடத்தில் அவைகளிருக்கின்றனவென்றும் அறி. (கஉ)

---

* (ஶ்ரீ) சத்துவகுணத்திலுண்டான ஶரீரதாரிகள்.

† (ஶ்ரீ) இரஜோகுணத்திலுண்டான, ஹர்ஷசேஷ்டாதிகள்.

‡ (ஶ்ரீ) தமோகுணத்திலுண்டான ஶோகமோஹாதிகள்.

§-¶-‖ (ஶ்ரீ) அவைகளுக்கு நான் (அதீனம்) சுவாதீனமன்று. (ஈ) (உ) (கீ,வி) என்னுடைய இருப்பானது அவைகளுடைய அதீனமல்ல.

+ -÷ (ஶ்ரீ) (உ) (கீ,வி) அவைகள் எனக்கு அதீனமானவைகள். (ஈ) அவைகள் எனக்கு சரீரமாய் என்னையாசிரயித்திருக்கின்றன. இதின் தாத்பரியமென்னவென்றால், ஆத்மாவன்றியில் சரீரமிருக்கமாட்டாது. ஆத்மா தேகத்தை விட்டுமிருப்பான். அவன் தேகத்தினால், போகவிஷயமாய் உபகாரமடைகிறான். எனக்கோ, தேகத்தினாலாகவேண்டியதொன்றுமில்லை. லீலையின்பொருட்டு தேகத்தை கிரகித்திருக்கிறேன் என்பதே.

க.க. த்ரிபிர்-கு-ணமயைர்-பாவை ரேபிர்ஹ்வ-யிதஃ ஜகத்।
மோஹிதம் நாபிஜா நாதி மாமேப்ய ஃபரமவ்யயம்॥

த்ரிபிஃ*	மூன்றுவிதமான
கு-ணமயைஃ	குணவிகாரங்களாயுள்ள
பாவை	இந்தவஸ்துக்களிலுலே
பாரமெஃ	
மோஹிதம்†	மோகத்தையடைந்த
யயம்-பம்	இந்தச் சகலமான (பிராணிகளும்) பிரபஞ்சமும்
இதம்	
ஜகத்	
நாபிர்ஜ்ஞம்	இவைகளினின்றும்
பரம்‡	வேறுயிருக்கிற
அவ்யயம்	நாசமற்ற
மாம்§	என்னை
நாபிஜா நாதி	அறிகிறதில்லை.

(சத்துவ-ரஜஸ்-தமஸ்) குணவிகாரங்களாயும், மூன்றுவிதங்களாயுமுள்ள இந்த (சமதமாதி, இராகதுவேஷாதி, சோகமோகாதி சுவரூபமாயிருக்கிற) வஸ்துக்களிலுலே, மோகத்தையுடைய சகல பிராணிகளும், இந்தவஸ்துக்களி னின்றும் வேறுயிருக்கிற, நாசமமற்ற என்னையறிகிறதில்லை.

(ஸ்ரீ) "வஸ்துக்களி னின்றும் வேறுயிருக்கிற" "நாசமற்ற" என்கிற இந்த விசேஷணங்களிலுல், காணப்படுகிற சகலப்பிரபஞ்ச சுவரூபத்தைவிட பிரம்ம சுவரூபம் அந்நியமானதென்றும், காணப்படுகிற இந்த சகல பிரபஞ்சமும் நாசத்தை யடையுமென்றும், பிரம்ம சுவரூபமானது நாசமடையாததென்றும், இந்த சகல வஸ்துக்களிலுமிருக்கிற பிரம்மம், "ஸாக்ஷீசெதாகெவலொநிர்-கு-ணஶ்ச" என்கிற வேதவாக்கியப்படிக்கு, அந்த வஸ்துக்களில் ஒட்டாமல் சாக்ஷியாய்மட்டுமிருக்கிறதேயன்றி, வஸ்து சுவரூபமா யில்லாமையால், வஸ்

---

* (ஈ) தேகம், இந்திரியங்கள், போக்கிய சுவரூபமானவஸ்துக்கள் என மூன்று விதம்.

† (உ) (ஸ்ரீ,வி) குண சுவரூபத்துடனிருக்கிற ஜீவர்கள் தங்களைப்போல், பரமாத்மாவும், குணசுவரூபத்துடனிருப்பதாக மோகத்தையுடையவர்களா யிருக்கிறார்கள்.

‡ (ஈ) சிரேஷ்டமாயிருக்கிற.

§ (உ) (ஸ்ரீ,வி) அப்பிராகிருத தேகத்தையுடைய என்னை.

து நாசத்திலுல் பிரம்மத்திற்கு நாசமில்லை யென்றும், எற்படு
கிறது. (கூ)

கச. மெஹவீஹெவுஷாமாணையீ ஜஜாயாஊர்தவ்யா।
ஸாஜவயெவவஹவுஜெ ஸாயாஜெதாம்தாஞ்ஜிதே॥

மெஹவீ	தெய்வசம்பந்தமான
மாணையீ	குணத்திரயரூபமான (மூக்குணரூபமான)
வஷா	இந்த
ஜஜ	என்னுடைய
ஸாயா	பிரகிருதியானது
ஊர்தவ்யா	தாண்டக்கூடாதது
ஸாஜவ*	என்னையே
யெ	எவர்கள்
வவஹவுந்தெ	சரணமடைகிறார்களோ
தெ	அவர்கள்
வாதாம்	இந்தமாயையை
ஸாயாம்	
தாஞ்ஜிஹி	தாண்டுகிறார்கள். (நிவர்த்தித்துக்கொள் ளுகிறார்கள்.)

தெய்வசம்பந்தமானதும், குணத்திரய மானதுமாகிய இந்த வெ
ன்னுடைய மாயையைத் தாண்டுவ தரிது. என்னையே எவர்கள் ச ர
ணமடைகிறார்களோ, அவர்க ளிந்தமாயையைத் தாண்டுகிறார்கள்.

(ரா) மாயையானது, மூக்குணங்களுடன் கூடினது. அது
ஈசுவரனுல் சிருஷ்டிக்கப்பட்டது. அது (மாயை) மித்தை (பொய்)
என்பது சரியல்ல. அது சத்தியமானது. எப்படியென்றுல், மந்திரங்
கள், (வெடி) மருந்துகள், மூதலியவைகளினுல், பலவிசித்திரங்களை
க் காண்பிவிக்கிறவர்கள் மாயாவிகளென்று சொல்லப்படுகிறார்கள்.
இப்படிப்பட்ட இந்திரஜாலம் மூதலியவித்தைகளினுல், காணப்ப
டும் விசித்திரங்கள் மித்தையானாலும், அந்த இந்திரஜாலம் மூதலிய
வித்தைகளில் காணப்படுகிற விசித்திரங்கள் எதினாலோ, அந்தக்
கருவியாகிய மந்திராதிகள் மித்தையல்ல. இந்தச் சத்தியமாகிய மா
யையைத்தான், "ஸாயாஹ்யேஷா தைவீ" என்கிற சுருதியில்
ஈசுவரமாயை என்று சொல்லியிருக்கிறது. இதெப்படி உலகத்தை
மோகிப்பிக்கிற தென்றுல், ஈசுவர சுவரூபத்தை மறைத்து, விஷய
ங்களில் பற்றுதலை யுண்டாக்கிறது. இது அந்த மாயையினுடைய சக்

---

* (ரா) சகலதருமங்களையும் விட்டுவிட்டு ஆத்மாவாயிருக்கிற என்னையே.

தி, இந்தச்சக்தியும், அந்த மாயையும், சத்தியமானவையே யன்றி மித்தையல்ல. இந்த மாயையைத் தாண்டுகிறதென்றல், மாயையைப் போக்கடித்துக் கொள்ளுவதல்ல. மாயையினா லுண்டாகும் துன்பங்களை நிவர்த்தி செய்துகொள்ளுவதே.

(ஜீ,வி) மாயையென்பவள், விஷ்ணுவினுடைய ஒரு ஸ்திரீயான துர்க்கை. இவள், உலகத்தை மோகிப்பிக்கிற சக்தியை யுடையவள். அவளாலுண்டாகும் துன்பத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவது கடினமென்பது தாத்பரியம்.

(ஹா) "என்னையே சரணமடைந்தவர்கள்" என்பது பிரபஞ்ச வாசனையற்று, பிரம்மத்தைத்தவிர வேறொன்றையும் சிந்திக்காமலிருக்கிற பிரம்ம நிஷ்டர்களென்று தாத்பரியம். (கச)

கரு. நராஃஷ்யதிநாதி-ஞாஂ வ்ரவஹ்ருஂதி நராயஶாஂ।
ஶாயயாவஹ்ரதஜ்ஞாநா ஸ்வ-ரூஂஹாவஶாஸ்ரிதாஂ॥

ஷ்ஷ்யதிநஂ	பாபிகளாயும்
ஞாஂ	மூடர்களாயும்
ஶாயயா	{ மாயையினா லபகரிக்கப்பட்ட ஞானமுள்ளவர்களாயும் (ஆத்மஞானமற்றவர்கள்)
ஸ்வரூஂ ஹாவ ஂ } *	அசுரசுவபாவத்தை
ஸ்ரிதாஂ	ஆசிரயித்திருக்கிறவர்களாயும்
நராயஶாஂ	மனிதரில் கடையோராயு மிருக்கிறவர்கள்
ஶாஂ	என்னை
நவ்ரவஹ்ருஂதி	{ சரண மடைகிறதில்லை. (உபாசிக்கிறதில்லை.)

பாபிகளாயும், மூடர்களாயும், ஆத்மசுவரூப ஞானமற்றவர்களாயும், அசுரசுவபாவத்தை யுடையவர்களாயும், மனிதரில் கடையோராயு மிருக்கிறவர்கள், என்னை சரணமடைகிறதில்லை.

---

* (ஸ்ரீ) பரஹிம்சையும், அசத்தியமுமுள்ள சுவபாவமுடையவர்கள். (ஸ்ரீ) "ஓஂஹொஹ்வொஹாதிஹாநஸ்ர" என்கிற (இதின், கசு - வது அத்தியாயம், ச - வது) சுலோகத்தில் சொல்லியிருக்கிறவர்கள். (ஜீ,வி) தேகேந்திரிய பிராணன்களை இரகஸ்யமாகிக்கிறதில் திருஷ்டியுள்ளவர்கள் அசுரர்கள். அவ்வித சுவபாவமுள்ளவர்கள் அசுரசுவபாவமுள்ளவர்களென்று சொல்லப்பட்டது.

(ஈ) பாபிகள் கர்வைகப்பட்டவர்கள். அவர்களாவன்;—

க. மூடர்கள்.—ஒன்றை மற்றொன்றாக நிரூபிக்கிற விபரீதஞான முள்ளவர்கள். அதாவது ஈசுவரனுக்கே சேஷமாயிருக்க வேண்டிய (ஜீவ) ஆத்மாவையும், போகத்திற்குபயோக மான லௌகத்திலுள்ள வஸ்துக்களையும், தன்னுடைய சேஷமாக நினைக்கிறவர்கள்.

